# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



## நானும் என் வீட்டாருமோவென்றால்
## கர்த்தரையே
## சேவிப்போம்

யோசுவா 24:15


TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE

May - June 2019
Volume : 59

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 3

## AGTBC பட்டமளிப்பு விழா 2019 - மதுரை













## திரித்துவ வேதாகம கல்லூரி பட்டமளிப்பு விழா 2019 - செங்கோட்டை












## ஆசிரியரிடமிருந்து........!

# ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பம்

நமது கர்த்தர் குடும்பத்தை ஏற்படுத்தி அதை ஆசீர்வதித்தார் (ஆதி.1:27,28). ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பத்திற்கான அனைத்து ஆலோசனைகளையும் வேதத்தில் நமக்கு தேவன் தந்திருக்கிறார். குடும்பத்தை முக்கியப்படுத்தி எழுதப்பட்டுள்ள 127 மற்றும் 128ம் சங்கீதங்களை தியானிப்பது ஆசீர்வாதத்தை நமக்குக் கொண்டு வரும். இவ்விரு சங்கீதங்களும் தேவனோடு சரியான உறவு, மகிழ்ச்சியுள்ள குடும்ப வாழ்க்கை மற்றும் குடும்பத்திற்குத் தேவன் தரும் ஆசீர்வாதங்களைக் குறித்து நமக்குப் போதிக்கிறது. தேவன் நமது குடும்பத்தை இவ்வசனங்களின் மூலம் ஆசீர்வதிப்பாராக.

## 1. குடும்பத்தின் அஸ்திபாரம்

நமது குடும்பத்தைக் கட்டுகிறவர் கர்த்தர். தேவன் நமது குடும்பத்தை ஆசீர்வதிக்க, நாம் அவரது வசனத்தின்படி சரியான அஸ்திபாரம் போடுவது மிகவும் அவசியம்.

### கர்த்தருக்குப் பயப்படும் பயம் (Fear of God)

சங்கீதம் 128:1,4 வசனங்கள் கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் பாக்கியவான் என்று கூறுகிறது. நல்ல குடும்பம் உண்டாயிருக்க, குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தேவனுக்குப் பயந்து வாழ வேண்டும். பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கையிலும், வார்த்தையிலும் தேவ பயத்தைக் காண்பித்துத் தங்கள் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். தேவன் பரிசுத்தமுள்ளவர், நீதியுள்ளவர் என்பதையும் பாவத்தின் விளைவுகள் கடுமையானது என்பதையும் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். தேவ பயமில்லாத வீட்டில் தேவ ஆசீர்வாதம் தங்காது. தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம் (நீதி.8:13). மறைவான, துணிகரமான பாவங்கள், பொய்கள், கெட்ட வார்த்தைகள், அசுத்தமான புஸ்தகங்கள் இவைகளை நாம் வீட்டிலிருந்து அகற்ற வேண்டும். இப்படி உங்கள் குடும்பத்திலுள்ள யாவருக்கும் கர்த்தருக்குப் பயப்படும் பயம் உண்டா?

### கர்த்தரின் வழியில் நடத்தல் (Follow the Ways of God)

கர்த்தரின் வழியில் நடக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்று சங்கீதம் 128:1 கூறுகிறது. இது கர்த்தருடைய வசனத்திற்குக் கீழ்படிந்து வாழ்வதைக் குறிப்பிடுகிறது. பிள்ளைகள் தங்கள் பெற்றோர் தேவனை நேசிக்கிறார்களா? அவரைச் சேவித்து அவருக்குக் கீழ்ப்படிந்து வாழ்கிறார்களா? என்பதைப் பார்க்க விரும்புகிறார்கள். நாம் குடும்பமாக வேதத்தை வாசித்து ஜெபித்து அவர் வழிகளை அறிந்து அதில் நடக்கத் தீர்மானிக்க வேண்டும். நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் தேவனை அனுதினமும் தேடி அவருக்குக் கீழ்ப்படிகிறீர்களா?

### கர்த்தர் மேல் விசுவாசம் (Have Faith in God)

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா (சங். 127:1) என்று வேதம் கூறுகிறது. சங். 127:1,2,3 வசனங்களில் மூன்று முறை “விருதா” என்ற வார்த்தை வருகிறது. தேவன் இல்லாத அனைத்து காரியமும் வீணானது. அர்த்தமற்றது. ஆகவே தேவன் நமது

குடும்பத்தை ஆசீர்வதிக்க அவரை எப்பொழுதும் நோக்கிப் பார்த்து அவர் மேல் முழு நம்பிக்கை வைக்க வேண்டும். அவரை முற்றிலும் சார்ந்திருந்து அவரிடத்தில் ஜெபிக்க வேண்டும். நமது குடும்பத்தார் யாவரும் தங்கள் படிப்பு, வேலை இவைகளைப் பார்க்கிலும் தேவனோடு தங்களுக்கு உள்ள உறவுக்கு அதிகமான முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுக்க வேண்டும். ஏனெனில் இயேசு முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவரது நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும் (மத்தேயு 6:33) என்று சொன்னார். இயேசு நம்முடைய வாழ்க்கையில் முதலாவதாகவும், மையமாகவும் இருப்பாரென்றால், நமது குடும்பம் ஆசீர்வதிக்கப்படும். தேவைகள் சந்திக்கப்படும்.

## 2. குடும்பத்தின் அழகு

ஒரு குடும்பத்தின் அழகு அந்தக் குடும்பத்தின் அங்கத்தினர்கள் தங்களுக்குத் தேவன் தந்த பொறுப்புகளையும், கடமைகளையும் சரியாக நிறைவேற்றுவதில் இருக்கின்றது. இது குறித்து சங்கீதங்கள் 127&128 கூறும் காரியங்களைப் பார்ப்போம்.

### கணவன் குடும்பத்தின் தலை (Head)

ஒரு குடும்பத்தில் தகப்பன் அல்லது கணவன் தான் தலைவராக இருக்கிறார். அவர் கர்த்தருக்குப் பயந்து அவர் வழியில் நடக்க வேண்டும் (128:1). ஒரு சிறந்த மாதிரியாக எல்லாவற்றிலும் விளங்க வேண்டும். குடும்பத்தை நன்றாக நடத்த தெய்வீக ஞானத்தைக் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். தன் குடும்பத்திற்கு ஒரு நல்ல ஆசாரியனாக இருந்து வேத வசனத்தைப் போதித்துப் (உபா.6:5-9) பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற போதனையில் வளர்க்க வேண்டும் (எபே. 6:4 ; ஆதி.18:19). மேலும் கணவன் தன் கைகளின் பிரயாசத்தினால் சாப்பிட வேண்டும் (128:2). கணவன் தன் குடும்பத்தினரின் சரீர, ஆவிக்குரிய தேவைகளையும் சந்திக்கிறவராகக் காணப்பட வேண்டும். தன் குடும்பத்தை நன்றாகக் கவனிக்க வேண்டும் (1தீமோ.5:8). மனைவியை நேசித்து, கனப்படுத்தி, காப்பாற்ற வேண்டும் (எபே.5:25; 1பேதுரு 3:7). தன் மனைவியுடன் எப்பொழுதும் இசைந்திருந்து அவளை உலகத்திலேயே சிறந்த நபராகக் கருதி நேசிக்க வேண்டும் (ஆதி. 2 : 24; மத். 19 : 3-6 ; எபே. 5 : 31).

### மனைவி குடும்பத்தின் இருதயம் (Heart)

ஒரு குடும்பத்தில் தாய் அல்லது மனைவி இருதயமாக இருக்கிறாள். ஒரு சரீரத்தின் சிறப்பான செயல்பாட்டிற்கு தலையும் இருதயமும் எவ்வளவு முக்கியமோ, அதைப்போலக் குடும்பத்திலும் கணவன் மனைவியின் சிறந்த செயல்பாடுகள் அவசியம். ஒரு குடும்பத்தில் மகிழ்ச்சி, துடிப்பு, புத்துயிர் ஆகியவற்றைக் கொண்டு வருவது தாய். அவள் தன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைச் செடியைப் போல இருக்க வேண்டும் (சங்.128:3). மனைவியின் பிரதான கடமை வீட்டிற்குள் இருக்கிறது. வெளியே சென்று வேலை செய்து சம்பாதிப்பது தவறல்ல. ஆனால் தன் வீட்டுப் பொறுப்புகளைச் சரியாகக் கவனிக்காமல் அப்படி செய்யும் போது வீட்டின் மகிழ்ச்சியை இழக்க நேரிடும். புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் (நீதி.14:1). அவள் குடும்பத்திற்கு அழகையும், ஒழுங்கையும், அமைதியையும் கொண்டு வருகிறாள் (நீதி.31:10-31). மனைவி தன் புருஷனை நேசித்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் (எபே.5:23; 1பேதுரு 3:1; தீத்து 2:4). தன் பிள்ளைகளுக்கு தேவ அறிவையும், தெய்வீக மதிப்பீடுகளையும் கற்றுக்கொடுக்க வேண்டும் (1 தீமோ.1 : 5; 3: 15).

### பிள்ளைகள் கர்த்தருடைய சுதந்திரம் (Heritage)

பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், அவரால் கிடைக்கும் பலன் (சங். 127:4). அவர்கள் ஒலிவமரத்தின் நிழலில் வளரும் ஒலிவமரக் கன்றுகள் (சங்.128:4 ). ஆகவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல சாதகமான ஆவிக்குரிய சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும். வாலிபர்கள் பலவான் கையிலுள்ள வல்லமையான, சக்தி நிறைந்த அம்புகள் (சங். 127:5). அவர்கள் சரியான பாதையில் செல்ல அவர்களைக் கவனமாக கையாள வேண்டும். மேலும் பிள்ளைகள் தங்களுக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும் பூமியிலே தங்கள் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் தங்கள்

பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து அவர்களைக் கனப்படுத்த வேண்டும் என்று வேதம் கூறுகிறது (எபே. 6:1-3; யாத். 20: 12; நீதி. 13:1; 15:20).

## 3. குடும்பத்தின் ஆசீர்வாதங்கள்

நாம் தேவனுடைய வழிகளில் நடக்கும்போது பல ஆசீர்வாதங்களை இந்த இரண்டு சங்கீதங்களில் தேவன் நமக்கு வாக்குப்பண்ணியுள்ளார்.

**சமாதானம் (Peace)**

இன்று அநேகர் கடினமாக உழைத்தும் வருத்தத்தின், துன்பத்தின் அப்பத்தை சாப்பிடுகிறார்கள். அவர்கள் மனதில் சமாதானமும், மகிழ்ச்சியும் இல்லை (127:3). ஆனால் நாம் கிறிஸ்துவை நம் வாழ்வின் மையமாக வைத்து வாழும்போது எல்லா புத்திக்கும் மேலான ஒரு தேவ சமாதானத்தை தேவன் நமக்கு தருகிறார் (பிலி. 4:7). நமக்கு நிம்மதியான, பயமும், கவலையும் இல்லாத தூக்கத்தைத் தருகிறார் (127:3). நாம் தேவனைச் சார்ந்து அவரை நம்பிக் காரியங்களைச் செய்யும் போது, நமக்குள் ஒரு பூரண சமாதானம் உண்டாயிருக்கும் என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 26:3). நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய்; நீ படுத்துக்கொள்ளும்போது உன் நித்திரை இன்பமாயிருக்கும் (நீதி.3:24).

**பாதுகாப்பு (Protection)**

கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா என்று வேதம் கூறுகிறது (சங்.127:2). நமக்கு மனிதனின் பாதுகாப்பு மட்டும் உதவாது. தேவனுடைய பாதுகாப்பு மிகவும் அவசியம். பல இடங்களில் காவலர்கள் இருந்த போதும் திருட்டு, கொள்ளை, கொலை இவைகளைக் குறித்துத் தினமும் கேள்விப்படுகிறோம். ஆனால் நம்முடைய கர்த்தரோ தூங்காமல் உறங்காமல் நம்மைக் காக்கிறவர் (சங்.121:4). அவர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். அவர் உன் போக்கையும் வரத்தையும் காப்பார் (சங். 121:7,8). உன்னைச் சூழ தேவ தூதர்கள் பாளயமிறங்கிக் காப்பார்கள் (சங்.24:6), பொல்லாப்பு உனக்கு நேரிடாது. வாதை உன் கூடாரத்தை அணுகாது (சங். 91:10).

**நன்மையும், செழிப்பும் (Prosperity)**

உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும் என்று சங்.128:2-ல் தேவன் வாக்குப்பண்ணியுள்ளார். உங்கள் பிரயாசத்தின் பலனை சத்துருக் கொண்டு செல்லாதபடிக்கு தேவன் உங்கள் பொருளாதாரத்தை ஆசீர்வதித்து, எல்லாத் தேவையற்ற செலவுக்கும் விலக்கி காப்பார். உங்கள் ஆத்துமா வாழ்வது போல நீங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து, சுகமாயிருப்பீர்கள் (3 யோவான் 2). கர்த்தர் உனக்கு தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார். நீ அநேகம் மக்களுக்குக் கடன் கொடுப்பாய். கர்த்தர் நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார் (உபா. 28:8, 12).

**நீடித்த நாட்கள் (Prolonged life)**

சங்கீதம் 128 : 6ல் நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பாய் என்று வேதம் கூறுகிறது. நீடித்த ஆயுசு தேவனுடைய ஆசீர்வாதத்திற்கும், அவருடைய கிருபைக்கும், அடையாளமாக இருக்கிறது (யோபு.42:16,17;5;26). யோபு நான்கு தலைமுறையாகவும், யோசேப்பு மூன்று தலைமுறையாகவும் தங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளைக் கண்டது போல, நீங்களும் தேவனுக்கு பயந்து அவருக்குக் கீழ்ப்படிந்து வாழும்போது உங்களுக்கும் தேவன் பூரண வயதையும், நீடித்த ஆயுசையும் கொடுப்பார் (யோபு 42:16; ஆதி.50:23). நீடித்த நாட்களால் அவர் உன்னை திருப்தியாக்குவார் (சங். 91:14 ; 21:4 ; நீதி. 3:2, 16 ; 4:10 ; 9:11).

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

**Rev. P.S. ராஜமணி**

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## வேத வசனத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது

**அன்று**

ஆதிசபை உருவான பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் பரிசுத்த ஆவியில் நிறைந்து, அந்நிய பாஷைகளில் பேசுவதைக் கேட்டபோது மக்கள், இது என்ன என்று ஆச்சரியப்பட்டு திரள்கூட்டமாய் கூடிநிற்கையில் பேதுரு எழும்பி நின்று, தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது (அப்.2:16) என்று பேதுரு வேத வசனங்களை மேற்கோள்காட்டி விளக்குகிறார். பேதுருவின் பிரசங்கம் முழுவதும் வேத வசனங்களை விளக்குவதாகவே இருந்தது.

அப்போஸ்தலர் வேத வசனங்களைப் போதிப்பதையே முக்கிய ஊழியமாய்க் கொண்டிருந்தனர் (அப்.6:4). எல்லா உபதேசங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் வேத வசனமும் அளவுகோலாக இருக்கிறது. சரியான உபதேசமா, தவறான போதனையா என்று சோதித்துப் பார்க்க வேத வசனமே உரைகல்லாக இருக்கிறது.

மனிதனை உண்டாக்கின நாட்களில் ஆதாம் ஏவாளுடன் நேரடியாகப் பேசினார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்ற முற்பிதாக்களின் காலத்திலும் தேவன் நேரடியாகப் பேசினார். மோசே வாழ்ந்த காலத்திலிருந்துதான் (கி.மு.1500) வேத வசனங்கள் எழுதப்பட்டன. பஞ்சாகமங்கள் என்று சொல்லப்படும் (ஆதியாகமம்-உபாகமம்) 5 புத்தகங்களையும் மோசே எழுதினார். பல பரிசுத்தவான்களை பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தி பழைய ஏற்பாட்டு புத்தகங்களை எழுத வைத்தார். இயேசுவின் அப்போஸ்தலர் மூலமாக புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் எழுதப்பட்டன.

வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக. அவைகள் உபதேசத்தும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கு; பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2 தீமோ.3:16,17).

இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்கிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது (வெளி.1:3).

இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகள் உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியில் நடக்கிற போதும், படுத்துக்கொள்கிற போதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்துப் பேசி. அவைகளை உன் கையின் மேல் அடையாளமாகக் கட்டிக் கொள்வாயாக. அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது.அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக (உபா.6:6–9).

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும்,

பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும். கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங்.1:3).

அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடையில் ஒன்றும் பிசகுவதில்லை (சங்.37:31).

கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள் (சங்.119:1).

வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால்தானே (சங்.119:9).

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்; அவைகளைக் கைக் கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு (சங்.19:7,8,10,11).

அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம். உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங்.119:72,105).

பரிசுத்த வேத வசனங்கள் தேவனுடைய வார்த்தைகள், பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு பரிசுத்தவான்கள் எழுதி வைத்த பொக்கிஷங்கள் இவை.

வேத வசனங்களை அழிக்க முயற்சித்தவர்கள் அழிந்தார்கள். இன்று வரை வேத வசனங்கள் நிலைத்திருக்கின்றன. உலகில் அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட புத்தகம் பரிசுத்த வேதாகமமே. உலகில் கோடிக்கணக்கான மக்களால் தினமும் வாசிக்கப்படுவது வேதாகமமே.

### சபையின் இருண்ட காலம்

இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின் ரோமப் பேரரசன் கான்ஸ்டான்டின் கிறிஸ்தவனான போது சபைக்கு இருந்து வந்த உபத்திரவம் நீங்கிற்று. சபை அரசாங்க மார்க்கமாயிற்று. பல கோடி மக்கள் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். ஆனால் வேத வசனம் புறக்கணிக்கப்பட்டது. இதனால் சபைக்குள் துர்உபதேசங்களும், மூடப்பழக்க வழக்கங்களும், சிலை வழிபாடுகளும் நுழைந்தன. இதையே சபையின் இருண்ட காலம் என்று அழைத்தார்கள்.

வேத வசனங்களுக்கு முரண்பட்ட காரியங்களை சபை கைக்கொள்ளுவதைப் பற்றிய விளக்கவுரையை மார்ட்டின் லுத்தர் தான் போதகராக இருந்த சபையில் ஆணியடித்து விளம்பரப்படுத்தினார். (ஜெர்மனியிலுள்ள விட்டன்பர்க் சபையில் இதுவே சபையின் மறுமலர்ச்சியின் நாள்)

### இன்று

### வேதத்தைக் குறித்த விபரீத நிலை

பரிசுத்த வேதாகமம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்பதையும், முழு வேதாகமமும் தேவனுடைய வார்த்தை என்பதையும் நம்பாத

சபைத் தலைவர்கள், இறையியல் கல்லூரி பேராசிரியர்கள், போதகர்கள் ஏராளம் இருக்கின்றனர்.

பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று விசுவாசியாவிட்டால் சகல துர்உபதேசங்களும், மூடப்பழக்க வழக்கங்களும் சபைக்குள் வந்துவிடும். ஏகப்பட்ட துர்உபதேசங்களும், தீய பழக்க வழக்கங்களும் சபைக்குள் வந்துவிட்டதற்குக் காரணம் இதுவே.

இயேசு கிறிஸ்து சரீரப் பிரகாரமாக உயிர்த்தெழவில்லை என்று நம்பும் போதகர்கள் ஏராளம் உண்டு என்பதை ஆதாரப் பூர்வமாக கடந்த நிருபத்தில் எழுதினேன்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் மன்னிக்கும் என்ற சத்தியத்தை நம்பாத பெயர் கிறிஸ்தவர்கள் ஏராளம். இயேசு கிறிஸ்து மூலமாக மட்டுமே பாவமன்னிப்பு உண்டு என்று நம்பாத கிறிஸ்தவ தலைவர்களும், போதகர்களும் ஏராளம் உண்டு என்பது எவ்வளவு வேதனையானது.

அநேக சபையில் பிரசங்கங்கள் வெறும் சொற்பொழிவுகளாகவே நடத்தப்படுகின்றன. வேத வசனங்களை அடிப்படையாகக் கொள்ளாமல் வெறும் தத்துவங்களையும், மனித கொள்கைகளையும் பிரசங்கிக்கும் போதகர்களும், சபைத் தலைவர்களும் பெருகிவிட்டார்கள். இதனால் சபை மக்களின் வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படுகிறதில்லை.

தொடரும்....

---

## தாய்மார்கள் தினம்

மே 12, ஞாயிறு




## தகப்பனார்கள் தினம்

ஜூன் 16, ஞாயிறு




**தமிழ் பிரதேசத்திலுள்ள அனைத்து தாய்மார்கள் மற்றும் தகப்பன்மார்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்!**




## பெந்தெகொஸ்தே நாள்

ஜூன் 9, ஞாயிறு

**திருச்சபை விசுவாசிகள் அனைவரும்**
**பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை வாஞ்சித்துப் பெற்றுக்கொண்டு**
**தேவனுக்காக பிரகாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.**



# வேதாகமத்தில் மிகச்சிறிய புத்தகங்கள்
# III யோவான்

Rev. Dr. சாமுவேல் ராஜ் R.
All India National Director, Global University

வேதாகமத்திலுள்ள 66 புத்தகங்களில் ஒரே ஒரு அதிகாரத்தையுடைய புத்தகங்கள் மொத்தம் ஐந்து : ஒபதியா, பிலேமோன், 2 யோவான், 3 யோவான், யூதா. இக்கட்டுரையில் 3 யோவான் நிருபம் குறித்து ஆராய்வோம். புதிய ஏற்பாட்டில் காணப்படும் அனைத்து நிருபங்களிலும், இந்த நிருபமே (மூலமொழியாகிய கிரேக்குவில்) மிகச்சிறிய நிருபமாகும்.

**செல்வந்தர்களாகிய விசுவாசிகள் :**

காயு என்ற மிகப்பெரிய செல்வந்தராகிய விசுவாசிக்கு இந்நிருபம் எழுதப்பட்டது.

மக்கெதோனியனாகிய காயு (அப். 19:29). தெபையானாகிய காயு (அப்.20:4). பவுலையும் சபையனைத்தையும் உபசரித்து வந்த காயு (ரோமர் 16:23). பவுலால் ஞானஸ்நானம் பெற்ற காயு (1கொரி.1:15). என பல இடங்களில் இவன் குறிப்பிடப்படுகிறான்.

தங்கள் ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியம் செய்த ஸ்திரீகள் (லூக்கா 8:3). இயேசுவை அடக்கம் செய்த அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு (லூக்கா 27:57,60).பிலேமோன் போன்றோரும் செல்வந்தர்களாயிருந்த விசுவாசிகளே!

**மூப்பனாகிய யோவான் :**

யோவான் எழுதிய சுவிசேஷம், 1,2,3 யோவான் நிருபங்கள், வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய ஐந்து புத்தகங்களையும் எழுதிய யோவான், ஒவ்வொன்றையும் வெவ்வேறு சூழலில், வெவ்வேறு வாசகருக்கு எழுதினாலும், வாசிக்கிற அனைவருக்கும் இப்புத்தகங்களின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

கள்ளப்போதகர்களுக்கு கதவை அடைக்கும்படி அம்மாளுக்கு ஆலோசனை கூறி 2 யோவான் நிருபத்தை எழுதிய மூப்பனாகிய யோவான், 3 யோவான் நிருபத்தில் உத்தம ஊழியர்களை உபசரிக்கும்படி தங்கள் வீட்டுக் கதவைத் திறந்து கொடுக்க வேண்டும் என எழுதுகிறான்.

**முத்தான மூன்றுகள் :**

இந்த நிருபத்தில் முத்தான மூன்றுகளை மூன்று வித விசுவாசிகளின் வாழ்க்கையிலிருந்து யோவான் தருகிறார்.

- காயுவின் மூன்று விதமான வாழ்வு (வசனம் 2).
- தியோத்திரேப்புவின் மூன்று வித தீய சுபாவங்கள் (வசனம் 9,10).
- தீமேத்திரியுவின் மூன்றுவித சாட்சியின் வாழ்க்கை (வசனம் 12).

## 1. பிரியமான விசுவாசி காயு (வசனம் 1-8)

இவன் பிரியமானவன் 1,2,5 வசனங்களில் காயுவை யோவான் பிரியமானவன் என அழைக்கிறான்.

பிரியமான காயு மூன்று வித செழிப்பான வாழ்வினைப் பெற்றிருந்தான் (வசனம் 2).

- ஆவிக்குரிய வாழ்வில் செழித்தோங்கிய ஆத்தும வாழ்வு (ஆத்துமாவில் வாழ்வு).
- சரீர ஆரோக்கியத்தில் செழிப்பான வாழ்வு (சுகமான வாழ்வு).
- பொருளாதாரத்தில் செழிப்பான வாழ்வு (எல்லாவற்றிலும் வாழ்வு).

முறையான ஜெபம், வேத தியானம், ஆராதனை, ஆத்தும ஆதாயம் ஆகிய இவை நான்கும் ஒரு விசுவாசியை உலகத்தால் கறைபடாமல், தேவபக்திக்கேதுவான முயற்சிபண்ணி ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், ஆத்துமாவில் வாழ்வு பெறவும் உதவிடும்.

வேத வசனத்துக்குக் கீழ்படிந்து சத்தியத்தில் நடந்துகொண்டான் (வச.4). சங்கீதம் 1-ல் கூறப்படும் பக்தனின் மாதிரி காயுவின் மாதிரியாய் காணப்பட்டதை யோவான் கேட்டறிந்தான் : கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருந்த காயுவே இவ்வித சாட்சியைப் பெறமுடியும்.

ஊழியரை ஏற்று, உபசரித்து தனது அன்பை வெளிக்காட்டினான். தேவனுடைய நாமம் மகிமைப்படவும், அழிந்துபோகிற உலகில் ஆத்தும ஆதாயம் செய்வோரை ஆதரிப்பதும், பரிசுத்தவான்களை ஏற்றுக்கொண்டு உபசரிப்பதும் மிகவும் அவசியம் என்பதை காயுவின் வாழ்க்கை நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

## 2. பெருமையுள்ள தியோத்திரேப்பு (வசனம் 9,10)

சபையின் தலைவர் இயேசுவே! (கொலோ.1:18). வேலைக்காரன் என்னும் நிலையில் ஊழியனாய் தன்னைக் காத்துக்கொள்ளாத சபைப்போதகரும், என் வார்த்தையின்படியே காரியங்கள் சபையில் நடக்க வேண்டும் என அதிகாரத்தோரணையில் செயல்படும் விசுவாசிகளும், இந்த தியோத்திரேப்புவின் உறவின் முறையினரே ஆவர். நீண்டகாலம் ஒரு ஸ்தலசபையில் அங்கத்தினராய் இருப்பதாலோ ஸ்தாபனத்தில் பொறுப்பிலிருப்பதாலோ தியோத்திரேப்புவின் நிலைப்பாட்டினை எடுக்கலாகாது.

தியோத்திரேப்பு மூத்த ஊழியனாய் இருந்த யோவான்-ஐ சபையில் ஏற்றுக்கொள்ளவில்லை (வசனம் 9). மூப்பருக்குரிய கனம் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பதே வேதம் போதிக்கும் சத்தியம். மூப்பனாகிய யோவானைப்பற்றி பொய்யான வதந்திகளை அலப்பினான் (வசனம் 10). தனது வார்த்தைக்கு இணங்காதவர்களையும், உத்தம ஊழியருக்கு ஆதரவு தெரிவித்தோரையும் வெறுத்து, அவர்கள் மேலும் ஒழுங்கு நடவடிக்கைகளை எடுத்தான். சபையில் ஒழுங்கு நடவடிக்கை என்பது அவசியமே; ஆனால், தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்காக இவ்வித சர்வாதிகாரப் போக்கினைக் கையாண்ட இந்த தியோத்திரேப்புக்கு, பெருமையுள்ள விசுவாசி என்பதைவிட வேறு எந்தப் பெயரும் பொருத்தமாயிராது!

இவனைப் பாராட்டி இவனுக்கு ஒத்துப்பாடுகிறவர்களும் இவன் ரகமே. இப்படிப்பட்டவனைப் பின்பற்ற வேண்டாம் என யோவான் ஆலோசனை தருகிறான் (வசனம் 11).

### 3. சாட்சியுள்ள தேமேத்திரியு (வசனம் 11-14).

பின்பற்றத்தக்க சாட்சியின் வாழ்க்கை வாழ்பவர்களின் மாதிரியைப் பின்பற்றுவது சிறந்ததே. பவுலும் இப்படிச் செய்வது சரியென எழுதியுள்ளாரே! (1 கொரி. 11:1; பிலி. 3:17).

தேமேத்திரியு அன்று தனது பகுதியில் அறியப்பட்டக் கிறிஸ்தவர்கள் அனைவராலும் நற்சாட்சிப் பெற்றிருந்தான். தான் அங்கம் வகித்த ஸ்தல சபையிலும் சாட்சிப் பெற்றிருந்தான். வசனத்தின்படி வாழ்கிறவன் என்ற சாட்சியையும் பெற்றிருந்தான்.

யோவானை விசுவாச வாழ்க்கையிலும், ஊழியத்திலும் 'பழுத்தபழம்' எனலாம். இந்த ஊழியனே தேமேத்திரியுவைப் பற்றிச் சாட்சிக் கொடுத்தான்.

தேமா, கன்னானாகிய அலெக்சந்தர் போன்றோரைப் பற்றி (2 தீமோ. 4:9,14) பவுல் சொல்லும் சாட்சியை இங்கு ஒப்பிட்டுப் பார்ப்பது பயனளிக்கும், தேமேத்திரியுவின் மாதிரி நல்ல மாதிரி.

**அறிவோம் உணர்வோம்**

காயுவைப் போன்றும், தேமேத்திரியுவைப் போன்றுமுள்ள விசுவாசிகள் இன்றும் தேவை. இவர்கள் மூத்த ஊழியர் உள்ளத்தைத் தேற்றுவர், ஸ்தலசபையில் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்கு காரணமாயிருப்பர். ஆண்டவர் விரும்பும் விசுவாசிகளாய்த் திகழ்வார். ஆனால் தியோத்திரேப்பு வகை விசுவாசிகளைக் கொண்ட சபையானது சட்டதிட்டங்களை கொண்ட கறாரான சபை போன்று தோற்றமளிப்பனும், அதன் உள்ளே வளர்ச்சியின்மையையும் ஐக்கியமின்மையையும் தெள்ளத்தெளிவாய் காணமுடியும்.

"உனக்கு சமாதானமுண்டாவதாக...." என யோவான் காயுவுக்குச் சொல்லும் கிறிஸ்துவின் சமாதானம் நம் அனைவரோடும் இருப்பதாக!

---

## ஜெபியுங்கள்! தாங்குங்கள்!!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால், உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

ஆசிரியர்

---

## ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!



**அகில இந்திய ஏ.ஜி மாநாடு - ஜுன் 11-13**
**தமிழ் பிரதேச ஏ.ஜி மாநாடு - ஜுலை 9-11**
**தென் இந்திய ஏ.ஜி மாநாடு - செப். 24-26**



# உப்போ உப்பு!

அன்பானவர்களே!



மலை பிரசங்கத்தில் ஆண்டவராகிய இயேசு குறிப்பிட்ட உப்பு நானே. இறைமக்கள் அனைவரும் என்னைப்போல் இருக்கவேண்டுமென்றே அவர் விரும்பினார். ஏன் என்று கேட்கிறீர்களா? நான் பேசுவதை இங்கே நன்றாக கவனியுங்கள்.

## 1. இரட்சிப்படைதல் (Salvation)

கடலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவன் நான். கடலிலிருக்கின்ற வரை என்னை யார் மதிக்கிறார்? நான் பயனற்றவன். எதையாவது சமைப்பதற்கு யாராவது கடல் நீரை உபயோகிப்பார்களோ? உப்பளங்களில் என்னைத் தேக்கிவைத்து சூரிய ஒளியில் பதப்படுத்திச் சுவை தரும் உப்பாக மாற்றுகிறார்கள். அவ்வண்ணமே, நீங்களும் உலகத்தாராய் இருக்கும் வரை தேவனுக்கென்று பயன்பட முடியாது. “நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டேன்” என்றார் இயேசு (யோ.15:19). தொலைந்துபோனவர்களாய் உலகில் காணப்பட்ட உங்கள்மீது நீதியின் சூரியனை உதிக்கச்செய்து, உலகக் கடலிலிருந்து வேறுபிரித்து, உப்பாக உங்களை மாற்றியவர் அவரே (2கொரி. 4:6). ஆகவேதான் “சபை” என்று நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள். கிரேக்கமொழியில் சபை என்னும் சொல்லைக் குறிக்கும் “எக்ளீஷியா” என்ற பதம் “தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்” அல்லது “பிரித்தெடுக்கப்பட்டவர்கள்” என் றே பொருள்படுகிறது.

இந்நாட்களில், பிரித்தெடுக்கப்படுதல் என்ற சொல் சரியான விதத்தில் விளங்கிக்கொள்ளப்பட வேண்டும். உலகத்திற்கும் சபைக்கும் இடையே உள்ள வேறுபிரிக்கும் கோடு தனி நபர்களின் வசதிக்கேற்றாற்போல் சில நேரங்களில் மாற்றப்படுகிறது. மாறாக, வேத அடிப்படையில், தேவனின் அளவீடுகளின்படி இந்த வேறுபிரிக்கும் நிலை நிர்ணயிக்கப்படவேண்டும். தேவபிள்ளையே, இவ்வேறுபாட்டை விளங்கிக்கொண்டாயா? உன்னை உப்பாக மாற்றிய அவருக்கு உண்மையாயிருக்கிறாயா?

## 2. பரிசுத்தமாகுதல் (Sanctification)

அழுக்கில்லாமல் பளிச்சென்று வெண்மையாக இருந்தால்தானே என்னை மக்கள் உபயோகிக்கிறார்கள். அதற்கு நான் படும்பாடு என்ன தெரியுமா? தொழிற்சாலையில் என்னைத் தூய்மைப்படுத்த ஒரு நீண்ட வழிமுறையே உள்ளது -வேகவைத்து, உலர்த்திக் கறை நீக்கி, வெண்மையாக்கி, மினுமினுப்புப் பெறுகிறேன். சூரிய ஒளியில் எவ்வளவுக்கதிகமாய்க் காய்கிறேனோ அவ்வளவுக்கதிகமாய் ஒளிர்கிறேன். தூய்மையின் அடையாளம் வெண்மை (வெளி.7:14,1யோ.1:7). தூய்மையாக வாழும்போதுதான் மக்கள் உங்களை விரும்புகின்றார்கள். ஆகவே உங்களைப் பரிசுத்தமாக்கும்படித் தம்முடைய பிதாவினிடத்தில் இயேசு மன்றாடினார் (யோ.17:8,19). மற்றவர்களுக்கு

ஆசீர்வாதமாக நீங்கள் விளங்க வேண்டுமென்றால், பரிசுத்தமாகுதலின் குகையில் நீங்கள்புடமிடப்பட வேண்டும். நீதியின் சூரியன் உங்கள் மீது வீச வீச நீங்கள் ஒளிமயமாவீர்கள் (சங். 34:5).

### 3.சேவை புரிதல் (Service)

சேவை செய்யவே நான் பிறந்தேன். இவ்வுலகில் இதைத் தவிர வேறு நோக்கம் எனக்கில்லை. என் தொடர்பில் வருகின்ற எதையும் நான் சாரமுள்ளதாக்குகின்றேன், மாற்றத்தை விளைவிக்கின்றேன், சுவையான மாறுதலை அதில் பரிணமிக்கச் செய்கின்றேன். உங்கள் வாழ்வின் நோக்கம் என்னவென்று தெரியுமா? உங்களை ஒப்பற்ற உப்பாக மாற்றிய தேவனுக்கு சேவை செய்தலே. அவருடைய பார்வையில் நீங்கள் விலையேறப்பெற்ற சரக்கு! என்னைப் போலவே, உங்கள் தொடர்பில் வருகின்ற எவருடைய வாழ்விலும் மாற்றத்தை ஒளிரச்செய்ய உங்களால் இயலும். மக்களைக், குடும்பங்களை, சூழ்நிலைகளை – அனைத்தையுமே நீங்கள் மாற்ற முடியும்.

### 4. தியாகம் செய்தல் (Sacrifice)

''நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்'' ''நீங்கள் உலகிற்கு ஒளியாயிருக்கிறீர்கள்" என்று அடுத்தடுத்து ஆண்டவர் சொன்னதில் அர்த்தம் உள்ளது. உப்பு, ஒளி இரண்டுமே மக்களுக்கு மிகப் பெரிய வரப்பிரசாதம். இரண்டும் ஒரு தன்மையைப் பொதுவாகப் பெற்றுள்ளன. அது வேறொன்றுமில்லை - தியாகமே. ஒரு மெழுகுவர்த்தி ஒளிதரும் வேளையில் தன்னைக் கரைத்து உருக்குகிறது. அவ்வாறே, உணவுப் பண்டங்களில் நான் கலக்கப்படும்போதும் கரைந்தேபோகிறேன்! பழைய ஏற்பாட்டில் தகனபலிமீது உப்பு தூவப்பட்டது. உப்பில்லாத பலி இல்லை (எசேக். 43:24; மாற். 9:49). தியாகமில்லாமல் தேவனுக்குச் சேவை செய்வது கூடாத காரியம். தியாகம் செய்ய எந்த அளவுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களோ அந்த அளவுக்குத் தேவன் உங்களைப் பயன்படுத்துவார்.

தியாகத்தைக் குறித்து (மத்.16:24,26) ல் இயேசு கூறுகின்றார். இவ்வசனங்களுக்கு முந்திய பகுதியில்-கட்டுவதற்கும், கட்டவிழ்ப்பதற்கும் அவசியமான வல்லமையைக் குறித்து அவர் குறிப்பிடுகின்றார் (வச19). இதன் பொருள் என்ன? வல்லமையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமெனில் ஏதோ ஒன்றைத் தியாகம் செய்துதான் ஆகவேண்டும்.

### 5. பாதுகாப்புத் தருதல் (Security)

பொருட்கள் கெடாமலும், அழுகாமலும் காக்கப்பட, உப்பாகிய நான் பயன்படுத்தப்படுகின்றேன். எலுமிச்சைப்பழத்தை நீங்கள் வெட்டித் துண்டுகளை அப்படியே வைத்துவிட்டால் அவை அழுகிவிடும். ஆனால் அவைகளில் உப்புக் கலந்து வைத்தால், ஆகா! ருசியான ஊறுகாயாக மாறிவிடும். விலங்கின தோலை எடுத்து அப்படியே விட்டுவிட்டால் நாற்றம் சகிக்காது. ஆனால் என்னை அதன்மீது தடவி வைக்கும்போது, உங்கள் கைப்பைக்கும் இடைக்கச்சைக்கும் பயன்படும் மினு மினுப்பான பொருளாய் மாறுவேன். அவ்வாறே அழிந்து கொண்டிருக்கும் இவ்வுலகை நீங்களும் அழியாமல் காக்கவேண்டும்.

**6.சாரம் நிறைந்திருத்தல்** (Savour)

சாரத்தை இழந்துவிடும் அபாயம் எப்பொழுதுமே எனக்கு உண்டு. என்னை ஒரு தட்டில் வையுங்கள். என்ன நடக்கிறது? காற்றிலிருந்து ஈரப் பசையை உறிஞ்சுகின்றேன். சிறிது நேரத்தில் நீர்நிலைக்கு வந்து விடுகின்றேன். எந்தத் தண்ணீரிலிருந்து வேறு பிரிக்கப்பட்டேனோ அந்தத் தண்ணீரே, நான் திறந்து வைக்கப்படும்போது எனக்கு எதிரி ஆகிவிடுகின்றது. ஆகவே தான், "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று இயேசு சொன்ன உடனேயே, "உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்?'' என்று வினவினார். உங்களுக்கும் இதுதானே பிரச்சனை? எந்த உலகிலிருந்து நீங்கள் பிரித்தெடுக்கப்பட்டீர்களோ, அதே உலகு உங்கள் நீதியின் சாரத்தை இழக்கச் செய்யும் எதிரியாக உங்களை அச்சுறுத்துகிறது.

தேவ நீதியே உங்கள் சாரம். அதைப் பேணிக்காக்கவேண்டிய பெரும்பொறுப்பு உங்களுக்கு உண்டு. இஸ்ரவேல் மக்களை எண்ணிப்பாருங்கள். எகிப்தை விட்டு அவர்கள் வெளியே கொண்டுவரப்பட்டிருந்தாலும், அவர்கள் உள்ளத்திலிருந்து எகிப்தை வெளியே கொண்டுவர இயலவில்லை. எகிப்தின் நினைவுகள் அவர்களை அவ்வப்போது பின்னோக்கி இழுத்தது. உங்கள் பழைய பாவமும், சுபாவமும் உங்களை இன்னும் நச்சரிக்கிறதா? பின்னோக்கி இழுக்கிறதா? கவலைப்படாதிருங்கள். நீங்கள் உலகத்திலிருந்தாலும் உலகம் உங்களை மேற்கொள்ளாது (1 யோ. 4:4). இயேசு உங்களுக்குள் வாழும் வரை நீங்கள் சாரம் இழக்கமாட்டீர்கள்.

**7. பொதுவாயிருத்தல் (Sociable)**

நல்லது, என் முழுப்பெயர் என்ன தெரியுமா? - "பொதுவான உப்பு" (Common Salt). அனைத்துலகிற்கும், அனைத்து மக்களுக்கும் நான் பொதுவானவன். ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு எனக்கில்லை. ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; ஞானியென்றும் மூடனென்றும் இல்லை; குலத்தில் உயர்வு, தாழ்வு இல்லை. யாவருக்கும் நான் சொந்தக்காரன். செல்வச் சீமான் அழகிய பீங்கான் கோப்பையில் என்னை வைக்கின்றான், எளியவனோ ஒரு மண்பாண்டத்தில் என்னை வைக்கின்றான். அவ்வளவுதான் வேறுபாடு. அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுவதுபோல நான் எல்லாருக்கும் எல்லாமானவன் (1கொரி.9:19,22). உலகமே என் சொந்தம். ஒவ்வொரு கோத்திரம், ஒவ்வொரு மொழி சார்ந்த அனைவருக்கும் நான் பொதுச்சொத்து. "யாதும் ஊரே, யாவரும் கேளீர்!" இவ்வாறு அனைவரும் அணுகி அனுபவிக்கக்கூடிய நபராக நீங்கள் இருக்கிறீர்களா? எந்த நபருக்கும் எந்த வேளையிலும் எந்த இடத்திலும் எந்த வகையிலும் சேவை புரிய நீங்கள் ஆயத்தமா?

சமாதானத்துக்கு அடையாளமாக மக்கள் என்னைப் பரிமாற்றம் செய்து கொள்கின்றனர். தங்களுக்கிடையே அமைதியை நிலைநாட்டிட நாடுகள் "உப்பு ஒப்பந்தம்" நிறைவேற்றுகின்றன. "சமாதானம் பண்ணுகிறவர்கள் பேறுபெற்றோர்" என்றார் இயேசு (மத்.5:9). "உங்களுக்குள்ளே உப்புடையவர்களாய் இருங்கள், ஒருவரோடொருவர் சமாதானம் உடையவர்களாய் இருங்கள்" என்றும் அவர் கூறினார். (மாற். 9:50).

பொறுமையுடன் கேட்டமைக்கு நன்றி - உப்பு.

நன்றி : ஆசீர்வாதம்

# A.G. தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி

(An ATA Accredited College)

மதுரை – 625 016

Email : agtbc1948madurai@gmail.com Website : www.agtbc.org

**1. Master of Divinity** (M.Div.) Regular

**Medium** : English | **Duration** : 3 Years

**Eligibility :** Recognized University Degree (10+2+3)

**2. Master of Divinity (M.Div.)** Extension

(For Men and Women) **Medium** : English | **Duration** : 3 Years,

**Eligibility** : Standard Entry: Recognized University Degree (10+2+3)

Upgrade : B.Th., or its equivalent.

**3. Bachelor of Theology** (B.Th.,)

**Medium** : English and Tamil | **Duration** : 3 Years

**Eligibility** : +2 Pass

**4. Diploma in Theology (Dip. Th.,)**

**Medium** : Tamil | **Duration** : 2 Years

**Eligibility** : S.S.L.C. (X Std Pass)

**5. Bachelor of Theology (B.Th.,)**

(Upgrading Programme only for A.G. Pastors and Non A.G. Pastors)

**Medium** : Tamil

**Duration** : 1 Year For Residential Graduates 3 Years Dip.Th + 3 Years Experience of Church Ministry

For Extension Graduates 2 Years Dip.Th + 10 Years Experience of Church Ministry

**Duration** : 2 Years (For AGTBC Extension Dip.Th Holders) + 3 Years Experience of Church Ministry

**6. Diploma in Theology (Dip. Th.,)**

(Through AGTBC Extension Studies)

**Medium** : Tamil | **Duration** : 2 Years | **Eligibility** : S.S.L.C. (X Std Pass)

---

**விண்ணப்ப படிவத்திற்கு**

**Download Application Form : www.agtbc.org**

---

தொடர்பு:

***Director of Residential Studies***

**AG Tamilnadu Bible College**

**Post Box-1, Bye Pass Road, Madurai - 625 016**

**Cell : 96982 55027, 94430 70974, Ph: 0452 2601940.**



# சீஷர்களை உருவாக்குவதில் நற்செய்தியாளர்களுக்குள்ள பொறுப்பு

Rev. J. தேவதாசன் கலையரசன்
தலைமை போதகர், அம்பத்தூர் மண்டலம்

## I. முந்தின கட்டுரைகளின் சுருக்கம்

சுவிசேஷத்தைக் கேட்ட ஒரு மனிதர் அதை இருதயத்தில் விசுவாசித்து வாயினால் அறிக்கையிடும்போது இரட்சிக்கப்படுகிறார் (ரோமர் 10:10). இன்றைய நாட்களில் இரட்சிக்கப்படுகிறவர்களை கிறிஸ்தவர்கள் என்றும், விசுவாசிகள் என்றும் அழைக்கிறோம். கிறிஸ்தவ வாழ்க்கையில் கற்றுக்கொள்ள வேண்டிய **வாழ்க்கைக் கல்வியை** 12 வாரப் பாடம், 16 வாரப்பாடம் என சுருக்கிப் பார்க்க இயலாது. ஆயினும் புதிய கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் நிலைக்க, வளர, கனி கொடுக்க ஏற்படுத்தப்பட்டுள்ள பாடதிட்டங்களும் இன்றியமையாததே. இருந்தபோதும், விசுவாசிகள் என்ற நிலையில் தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையைத் துவக்கினவர்கள் சிலகாலம் சென்ற பிறகே சில, பல பயிற்சிகளை முடித்த பிறகே சீஷர்கள் என்று கருதப்பட்டார்கள் என்பதற்கு வேதாகம ஆதாரம் இல்லை. இதைப் பற்றி விரிவாக முந்தின இரண்டு கட்டுரைகளிலும் அதற்குரிய வேதாகம வசனங்களோடு தியானித்திருக்கிறோம்.

இக்கருத்தை புரிந்து கொள்ளாதவர்கள், ஏற்றுக்கொள்ளாதவர்களால் ஏற்படுத்தப்படும் பிரச்சனைகளில் ஒன்றுதான். **எனது வேலை சுவிசேஷம் சொல்வது–உனது வேலை சீஷராக்குவது** என்பதாகும்.

இதனால் ஏற்படும் விளைவு, இன்றைய சபைகள் சந்திக்கும் முக்கிய பிரச்சனைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. அதாவது சபைகளில் அநேக விசுவாசிகள் தற்போது சுவிசேஷம் சொல்லப்பழகியிருக்கிறார்கள். எனவே ஆத்தும ஆதாயம் என்பது ஏறக்குறைய எல்லா சபைகளிலும் நடைபெறுகிறது. புதிய ஆத்துமாக்கள் ஏராளமாக வருகிறார்கள். ஆனால் அவர்களை ஆதாயம் செய்தவர்கள் சீஷர்களுக்குரிய போதனைகளை அறியாததினால், தங்கள் மூலம் இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு கற்றுக்கொடுக்க தவறிவிடுகிறார்கள். அற்புத அடையாளங்கள் பெற்று சபைகளுக்குள்ளே வந்தவர்கள் கூட விசுவாசத்தில் நிலைத்திருப்பதில்லை. ஏதோ ஒரு சூழ்நிலையில் தாக்குபிடிக்க முடியாமல் புறவாசல் வழியாக போய் விடுகிறார்கள். சபை, முன்வாசல் வழியாக வருபவர்களை கணக்கிட்டு மகிழ்கிறது. புறவாசல் வழியாக ஒரு கூட்டம் போகிறதை அறியாததினால், சபை பல வருடங்களாக ஒரே எண்ணிக்கையில் இருக்கிறது.

## இப்பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வாக நாம் கருதுவது

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை சுவிசேஷமாக கூற அறிந்தவர்களே, ஆத்தும ஆதாயம் செய்பவர்களே சீஷர்களுக்குரிய போதனைகளையும் கொடுக்க அறிய வேண்டும் என்பதேயாகும்.

சீஷத்துவம் என்பது எட்டமுடியாத உயரமாக கருதுவதும் தவறு, அதே சமயம் சீஷத்துவத்திற்கான போதனைகளை கொடுக்காமல் விட்டு விடுவதும் தவறு. எப்படி சுவிசேஷம் சொன்னதால், மக்கள் இரட்சிக்கப்படுகிறார்களோ, தேவனோடு

ஒப்புரவாகுகிறார்களோ அந்தளவு அவர்கள் கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள விசுவாசத்தில் நிலைத்திருக்க, வளர, கனிகொடுக்க, விலைக்கிரயம் கொடுக்க, போதிக்கப்பட வேண்டும். எனவே ஆத்தும ஆதாய வீரர்கள் தங்கள் மூலம் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவில் நிலைத்திருக்கக்கூடிய உபதேசங்களை கற்றுக்கொடுக்கவும், உபதேசிக்கவும் அறிந்திருக்க வேண்டும்.

சுவிசேஷம் சொன்னதுடன் எனது கடமை முடிந்தது என்று சொல்கிறவர்களாலும் ஏராளமான ஆத்துமாக்கள் சபைக்கு கிடைப்பார்கள். ஆனால் நிலைத்திருக்கமாட்டார்கள். சீஷத்துவப் போதனையுடன், குறிப்பாக இலக்கு வைத்து, ஆதாயம் செய்தவர்களை கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கச் செய்பவர்களால், சபைக்கு வருபவர்கள் வலிமையான அஸ்திபாரமாக மாறுவார்கள்.

எனவே ஆத்தும ஆதாய வீரர்கள், ஒருவரை சீஷராக்க உதவும் ஆரம்ப கட்டப் போதனைகளை இன்று கற்றுக்கொள்வோம். சபைக்கு வந்து பாருங்கள் என்று அழைக்கும் விசுவாசிகள் ஏராளம். அவர்கள் மூலம்தான் சபைகள் நிரம்பி வழிகிறது. ஆயினும் அது ஒரு மனிதரை மாற்றும் சுவிசேஷம் அல்ல, கிறிஸ்துவை தொடர்ந்து பின்பற்ற உதவும் சீஷத்துவ போதனைகளும் அல்ல, எனவே இக்கட்டுரையில் சுவிசேஷத்தை முழுமையாக அறிவிப்பதுதான் சீஷத்துவத்தில் துவக்கப்புள்ளி என்ற நிலையில் இரட்சிப்பிற்குள் நடத்த உதவும் போதனைகளை முதலாவது தியானிப்போம்.

## II. இரட்சிப்பிற்குள் நடத்த அறிந்து கொள்ளுங்கள்

"எங்கள் சபைக்கு வந்து பாருங்கள்" என்று அழைப்பது ஒரு இளம் கிறிஸ்தவருக்கு மிகச் சிறந்த எளிதான கருவியே. ஏனென்றால் இப்படிச்சொல்ல அறிந்ததால் தங்கள் நண்பர்களை, உறவினர்களை சபைக்கு அழைத்து வந்த மக்கள் ஏராளம் பேர் உண்டு. இப்படிச் செய்கிறவர்களை மட்டுப்படுத்திவிடக்கூடாது. ஆயினும் அவர்கள் **காலத்திற்கும்,** வந்து **பாருங்கள்** என்று சொல்வதையே சுவிசேஷமாக நினைத்துவிடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். அதாவது முழுமையான சுவிசேஷம் கூறப்பழக்க வேண்டும்.

ஏனெனில் எங்கள் சபைக்கு வந்துபாருங்கள் என்பது சுவிசேஷமல்ல அல்லது உங்கள் சொந்த சாட்சியை மட்டும் சொல்வது சுவிசேஷமல்ல. சுவிசேஷம் என்பது ஒரு பாவியின் இருதயத்தில் இயேசுகிறிஸ்து யார்? அவர் அவனுக்காக என்ன செய்தார் என்பதைச் சொல்வதே நற்செய்தியை முழுமையாக அறிவிப்பது என்கிறோம் (1கொரி.15:1-5).

இயேசு கிறிஸ்துவின் பாடு மரணம், உயிர்த்தெழுதல், பிராயச்சித்தம் உள்ளடக்கிய நற்செய்தி உங்களுக்கு பழையதாக தோன்றும். கேட்பவருக்கு பைத்தியமாகத் தோன்றும் (1 கொரி.1:21). ஆனால் அச்செய்தியை வைத்து இரட்சிப்பதே தேவனுடைய திட்டம்.

ஒருவரிடம் சுவிசேஷம் கூறுமுன் நட்பு ஏற்படுத்துவது நல்லதுதான். நம்பிக்கை ஏற்படுத்துவது அவசியம் (எபி.4:2). ஆயினும் மையச் செய்தி இயேசு கிறிஸ்து யார்? அவர் நமது மீட்பிற்காக செய்தது என்ன? என்பதைக் கூறும்போதே, கிறிஸ்து மீது கேட்பவருக்கு ஈர்ப்பு, நம்பிக்கை உண்டாகும். அவர்களுக்குள் விசுவாசத்தை ஏற்படுத்தும் அளவு, சொல்லப்படும் அளவு, கேட்பவர் இரட்சிக்கப்படுகிறார் (எபி.4:2). இரட்சிப்பிற்குள் நடத்துவது எப்படி? என்பதை விரிவாக அடுத்த அத்தியாயத்தில் ஆராய்வது அவசியம். இதைச் சரியாக புரிந்து கொண்டால்தான் உங்கள் ஆத்தும ஆதாயம் பலன் உள்ளதாக இருக்கும். சீஷத்துவ விளைவுகளை ஏற்படுத்தும். இல்லாவிட்டால் வெறும் கூட்டமே சபைகளில் நிரம்பும்.

இரட்சிப்பின் மையச் செய்தியை கேட்கும் ஒரு நபர் அதே நாளில் அர்ப்பணிப்பதும் உண்டு. வேறு சிலருக்கு சரியான புரிதல் ஏற்பட மீண்டும் விளக்குவது அவசியமாகும். ஆகவே ஆத்தும ஆதாயம் செய்வார்கள் எண்ணிக்கைப் போட்டியில் முந்திச் செல்ல ஏற்படும் அவசரத்துடன் எப்படியாவது நிறைய பேர்களுக்குச் சொல்லிவிட வேண்டும் என்று மட்டும் தீர்மானித்து விடாதிருங்கள். சுவிசேஷத்தைக் கேட்கும் நபர்கள் புரிந்து கொள்ளுமட்டும் பொறுமையுடன் சொல்ல அறிய வேண்டும் (அப். 8:31).

ஒரு அவிசுவாசிக்கு புதிய மதம், புதிய சபை ஒன்று சுட்டிகாட்டப்படுமேயானால் அதில் இணைவது அவருக்கு சிரமமும் இருக்காது. நமது நற்செய்தியாளர்கள் விசுவாசிகள் செய்யும் தவறு கிறிஸ்தவ மதத்தை காட்டுகிறோம். நுழைவு வாசலை காட்டத்தவறுகிறோம்.

கிறிஸ்துவை அறிமுகம் செய்து வையுங்கள். அவருடன் உறவு ஏற்படச் செய்யுங்கள். பின்பு அவரது போதனைகளை அவர்களுக்குப் போதியுங்கள். 2000 வருடங்களாக செய்யப்பட்டுவரும் ஒரு மாபெரும் தவறு, மக்களின் மனதில் கிறிஸ்துவின் போதனைகளை முதலாவது திணித்து விடுகிறோம். எனவே கேட்பவர்கள் தங்களால் முடிந்த கற்பனைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிலதை நிறைவேற்றுவார்கள். இப்படி கிறிஸ்துவுடன் உறவு ஏற்படாமல் வெறுமனே கிறிஸ்தவ மதத்திற்குள்ளும் சபையின் வாழ்வுக்குள்ளும் வந்துவிடுகிறார்கள். இப்படிதான் கிறிஸ்துவுடன் ஏற்படும் உறவு சரியான உறவாக ஏற்படாமல், கிறிஸ்துவின் போதனைகளில் மட்டும் வளரும் நூதன சீஷர்கள் உருவாக்கிவிடுகிறார்கள்.

முதலாவது இரட்சிப்பின் செய்தியை, ஒப்புரவாகுதலின் செய்தியை சரியாக புரிந்து கொண்டு, நற்செய்தியாளர் அறிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் கேட்பவர்களுக்கு புதிய ஒரு வாழ்க்கை முறை, கிறிஸ்தவம் உண்டாகாது. மாறாக புதிய ஒரு கிறிஸ்தவ மதம் ஒன்றை அறிந்து அதில் எளிதாக இணைந்து கொள்வார்கள். விசுவாசப் பரீட்சையில் நிலை நிற்கமாட்டார்கள்.

எனவே தேவனோடு ஏற்படும் உறவை முக்கியப்படுத்தி கிறிஸ்துவை அறிமுகம் செய்து வையுங்கள். இக்கருத்தை உணர்த்தும் இளையகுமாரன் கதையிலிருந்து முதலாவது இரட்சிப்பு பின்பே சுத்திகரிப்பு என்ற வேதசத்தியத்தை அறிந்து கொள்ளலாம் (லூக்கா 15:18-22).

- தொடரும்....

---

**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

**" Tamil District Council of SIAG "**

என்ற பெயரில் காசோலை அல்லது DD எடுத்து
பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு சென்னையில் உள்ள
நமது பொருளாளர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

The Treasurer,
Tamil District Council of SIAG, E-17, Anna Nagar, Chennai - 600 102



# உயிர்மீட்சியே நமது தேவை

**பாகம் : 5**

**Rev. Dr. L. ஜெயபாலன்**

கொடைக்கானல்



உயிர்மீட்சி அல்லது எழுப்புதல், இன்றைய கிறிஸ்தவ சபைகளின் மிகப்பெரிய தேவையாகும். பெலவீனமான மனிதன், இரட்சிக்கப்படும்பொழுது பரிசுத்தாவியின் அபிஷேகம் பெறும்போது, தன்னிடத்தில் காணப்பட்ட தெய்வீக அன்பு, ஜெப வாழ்க்கை, வேதம் வாசித்தல், கடவுளின் அன்பைக் குறித்து சாட்சி பகருதல் போன்றவைகளில் இருந்து பின்தங்கி காணப்படுகிறான்.

உயிர்மீட்சியைக் கொண்டு வருவது கடவுள் மாத்திரமே. பரிசுத்தவான்கள் பிறருக்காக மன்றாடி விண்ணப்பங்களை ஏறெடுக்கையில் தக்க சமயத்தில் பரிசுத்தாவியானவர், தனிப்பட்டவர்களிடம், சபையாரிடம் தலைவர்களிடம் ஒரு எழுப்புதலை கொண்டு வருகின்றார்.

நான் வேதாகமக் கல்லூரியில் 1964-68 வரை பயின்று, மதுரை ஏ.ஜி வேதாகம கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிகையில், அந்த நாட்களில் கர்த்தர், காலஞ்சென்ற சகோதரி சாராள் நவரோஜி, சுவிஷேசகர் ஜீவானந்தம், பிரதர் D.G.Sதினகரன் போன்றவர்களை வல்லமையாய் உபயோகித்தார். வெளிநாட்டில் ஓரல் இராபர்டஸ், T.L.ஆஸ்போன் இன்னும் பலரை, அவர்கள் பிரசங்கம் டேப், நூல்கள் மூலமாய் தமிழ்நாட்டில் உள்ள வாலிபர்கள் மத்தியில் உயிர்மீட்சியை உண்டுபண்ணினார். காரைக்குடியில் வாலிபர்கள் மத்தியில் ஆவியானவர் வந்து இறங்கினார். அப்படி தொடப்பட்ட வாலிபர்கள், தனித்தாள் ஊழியம், ஜெப ஊழியம் போன்றவைகளில் களம் இறங்கி அநேகரை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினர்.

திருச்சியில் கல்லூரியில் படித்த மாணவனை கர்த்தர், அங்குள்ள கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள், குருமார்கள் மத்தியில் உபயோகித்தார். இந்த மாணவர் திண்டுக்கல் G.T.N.ஆர்ட்ஸ் கல்லூரியில் படிக்கையில் ஒரு ஞாயிறு அன்று சினிமா பார்த்துவிட்டு C.S.I.ஆலயத்திற்குச் சென்றாராம். அங்கு, “வா பாவி மலைத்து நில்லாதே வா” என்ற பாடலை சபையார் பாடுகையில் பாவ உணர்வடைந்து கர்த்தரை தேட ஆரம்பித்தார். அவர் எனது சகோதரனே.

எந்த நேரமும் புதிய ஏற்பாடு கையில் இருக்கும். தினமும் காலையிலும் மாலையிலும் ஜெபிப்பார். இவருடைய ஜெபத்தில் பிசாசுகள் ஓடின, வியாதிகள் நீங்கின. இரயில்வே ஆபிஷர் முதல் பிராமண குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களும் இரட்சிக்கப்பட்டனர். அவர் மதுரைக்கு வந்து எனது அறையில் தங்குகையில் தண்ணீர்கூட குடிக்காமல் இரண்டு நாட்கள் உபவாசம் இருப்பார். என்னோடு வீடுகளில், சபைகளில் பேசும்பொழுது அந்த இடத்திற்கு தேவையான செய்தியை கர்த்தர் அவர் மூலம் கொடுத்தார். கடவுள் எனக்குள்ளே ஒரு சவாலை ஏற்படுத்தினார். எனக்குள்ளே ஆத்ம தாகம் அதிகரித்தது. 1969-70ல் கடவுள் ஒரு உயிர்மீட்சியை ஏற்படுத்தினார்.

கடந்த 50 வருடங்களாக எனக்குள் ஆத்தும பாரம் குறையவே இல்லை. எனது 73-வது வயதிலும் அபிஷேகத்திற்குள் நடத்துதல், பிரசங்கித்தல், போதித்தல், எழுதுதல் தனிப்பட்டவர்களுக்கு நற்செய்தியை, தினமும் அறிவித்தல் போன்றவைகளை தொடர்ந்து செய்து வருகின்றேன். எல்லா கனமும், துதியும், பரமபிதாவுக்கே உண்டாவதாக. இதை வாசிக்கின்ற உங்களுக்குள்ளே ஒரு பெரிய உயிர்மீட்சியை பரமன் இயேசு, பரிசுத்தாவியானவர் மூலம் ஏற்படுத்தும்படி ஜெபிக்கின்றேன்.

## உயிர்மீட்சி ஏற்படும் பொழுது காணப்படும் காரியங்கள்

பரம பிதாவின் மேல் அன்பு செலுத்துதல், எல்லோரையும் தேவ சாயலில் பார்த்தல் பெற்றோர், குடும்பத்தார், பிறர் மேல் அன்பு செலுத்துதல்.

பரிகாரம் செலுத்துதல்.... திருடியவைகளை திரும்பக் கொடுத்தல், பிறரிடம் மன்னிப்புக் கேட்டல் போன்றவை இடம் பெற்றன. உயிர் மீட்சியின் மிக முக்கிய பகுதியான நற்செய்தியை அறிவித்தல் அல்லது சாட்சி பகருதல் இதில் இடம் பெறுகின்றது.

**Love God : கடவுளிடம் அன்பு கூறுதல் :** "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக" (உபா.6:3). இந்தக் காரியம் எப்பொழுதும் எந்த சூழ்நிலையிலும் காணப்பட வேண்டும்.

**Live for God : கடவுளுக்காக வாழ்ந்து காட்டுதல் :** "மனிதனே நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" (மீகா 6:8).

**Lead others to God : கடவுளிடம் பிறரை நடத்துதல் :** "பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து உபதேசம்பண்ணி, தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும் சாட்சியாக அறிவித்தேன்" (அப்.20:20).

**இதில் நான்கு கரியங்களை அறிந்து கொள்ளலாம்**

1. "All the time" : "எல்லாக் காலங்களிலும் (அப்.20:18) இரவும், பகலும் கண்ணீரோடே இடைவிடாமல்" (வச.31).
2. "All the Truth " : "ஒன்றையும் மறைத்து வைக்காமல்" (வச.20). எல்லாவற்றையும் (வச.26).
3. "All the People" : "யூதருக்கும், கிரேக்கருக்கும்" (வச.21) அனைவருக்கும்
4. "All the Places" "வீடுகள் தோறும்" (வச.20).

காலஞ்சென்ற அகில உலக சுவிசேஷகர் T.L.ஆஸ்போன் அப்.20:20ஐ 20/20 (Vision) என்று அழைக்கின்றார்.

நற்செய்தி பகருவதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு இந்திய குடிமகனும், தங்களது உரிமையை அறிந்துகொள்ள வேண்டும். இந்திய அரசியல் சாசனம் (வழிபாட்டு சுதந்தரம் 25:1) பிரகாரம், ஒவ்வொருவரும் தங்களது நம்பிக்கைகளைப் "பின்பற்ற அல்லது தழுவ Right to profess; பயிற்சிப் படுத்த Right to practice, பறைசாற்ற Right to propagate " உரிமை என்பதை மனதில் கொள்ள வேண்டும். பிற மதங்களைக் குறித்து நேரடியாகவோ மறைமுகமாகவோ குறைசொல்ல ஒருவருக்கும் உரிமை இல்லை என்பதை உணர வேண்டும்.

ஒரு மனிதனை கடவுள் ஒருவரே மாற்ற முடியும். பரிசுத்தாவியானவர் "பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துகிறவர்". கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்ததால் ஒருவர் மனம் திருந்திவிட்டார் என சொல்லமுடியாது. கிறிஸ்துவின் அன்பை ஜெபத்துடன், முன்மாதிரியான வாழ்க்கையுடன் அறிவியுங்கள். இதனால் உங்களில் ஏற்பட்ட உயிர்மீட்சி தொடர்ந்து காணப்படும். கடவுளின் கிருபை உங்களுடன் இருப்பதாக. பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற, குடும்ப ஆலோசனைகளுக்கு 94434 74921 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.



# தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்


Rev.S. தாமரைச் செல்வன்

பொருளாளர், தமிழ் பிரதேச மிஷனரி ஊழியங்கள்


TAMIL DISTRICT MISSIONS India and beyond...

## அன்று... பவுலின் நாட்டம், ஓட்டம்
## இன்று... நமது நாட்டம், ஓட்டம்

கிறிஸ்துவில் அன்பானவர்களே,

"மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, ....இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபிரெயர் 12:1) என்ற வேதம் கூறுகிறது.

நமக்கு முன் ஓடின ஏராளமான பரிசுத்தவான்கள் இயேசுவின் அடிச்சுவடுகளையே பின்பற்றி தங்கள் ஓட்டத்தை ஓடி முடித்திருக்கிறவர்களின் பட்டியலில் பவுலும் ஒருவரே. அவரது நாட்டமும், ஓட்டமும் எவைகள் என கீழே காண்போம்.

**1. அதிகமாய் பிரயாசப்படுகிறோமா?**

"எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார். நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல. ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது" (1கொரி.15:8-10) என்று பவுல் கூறியுள்ளார். அன்று சவுல் தனக்கு தரிசனமானவருக்கு மற்றவர்களைவிட அதிகமாய் பிரயாசப்பட்டிருக்கும்போது இன்று உங்களுக்கு தரிசனமான இயேசுவுக்காக மற்றவர்களைவிட அதிகமாய் பிரயாசப்படுகிறோமா? அதிகமாக பிரயாசப்படுவோமாக,

**2. கர்த்தரை சேவிக்கிறோமா?**

பவுல் தான் கர்த்தரை சேவித்த விதத்தை பற்றிக் கூறுகையில்: "வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன்" (அப்.20:19) என்கிறார்.

நாம் எப்படி?

நாம் செய்கிற தவறுகளினால் வரும் கண்ணீரின் அனுபவங்கள், சோதனை அனுபவங்களில் அல்ல, கிறிஸ்துவை சேவிப்பதினால் வரும் கஷ்ட நஷ்டங்களில், நிறைவு குறைவுகளில், தளராது, பின்வாங்காது, சந்தோஷமாய், இயேசுவை சேவிக்கிறோமா? கஷ்டங்களின் மத்தியிலும், இல்லாமைகளிலும் நாம் இயேசுவை சேவிக்கிறோமா?

**3. செலவு பண்ணுகிறோமா?**

"ஆதலால், நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்பு கூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்பு கூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்" (2 கொரி.12:15) என்கிறார் பவுல். ஒரு ஆத்துமாவானாலும் தேவனின் பார்வையில் விலையேறப் பெற்றதே. நாம் எப்படி? ஒரு ஆத்துமாவை சந்திக்க ஒரு ஆட்டை தேடும் மேய்ப்பனைப் போல செயல்படுகிறோமா? அழிகின்ற ஆத்துமாக்களுக்காக செலவு பண்ணவும், செலவு பண்ணபடவும் விரும்புகிறோமா?

### 4. அறிவிக்கிறோமா?

ஒருமுறை நான் ஊழியஞ்செய்யும் பகுதியின் கிராம விபரங்களை சேகரிக்க சென்றபோது ஒரு நபரிடம், உங்களுக்கு இயேசுவைத் தெரியுமா? எனக் கேட்டதற்கு அவர் யார்? அவரை எங்கே பார்ப்பது? எந்த நாளில் பார்ப்பது? என்று என்னிடம் ஒரு டாக்டரை பார்க்க கேட்பதுபோல, ஒரு மந்திரியைப் பார்க்க கேட்பது போல கேட்டார். அப்பொழுது என் இருதயம் சுக்கு நூறாக நொறுங்கியது. இயேசு மரித்து மீட்பை உண்டுபண்ணி வைத்து சுமார் 2000 வருடங்களுக்குப் பின்பு கூட இன்னும் ஆத்துமாவின் மீட்பராகிய அவரை ஒருமுறை கூட கேள்விப்படாமல் இருக்கிறார்களே?

நம் ஊர்களிலும், நம்மை சுற்றிலும் இருக்கிற ஜனங்களின் நடுவிலும் நம் எல்லைகளை தாண்டி பிறமக்கள், பிறமொழி, பிற மாவட்டம், பிற மாநிலம், பிற நாடுகள் என்று அடுத்தடுத்த நிலைகளுக்கு செல்வோமா? நற்செய்தி அறிவிப்போமா?

**நீங்களும் செய்யலாமே....**

- நீங்கள் ஒரு முறை தமிழகத்திற்கு வெளியே மிஷனரி பயணம் செய்யலாமே?
- நீங்கள் குடும்பமாக தமிழகத்திற்கு வெளியே மிஷனரியாக போகலாமே?
- உங்கள் பிள்ளைகளை அனுப்பலாமே?
- நீங்கள் ஒரு மிஷனரிக்கு மாத உதவித் தொகை ரூ.5000/- முழுமையாக அல்லது அதில் உங்களால் முடிந்த பகுதியோ மாதந்தோறும் கொடுக்கலாமே?
- நீங்கள் தினமும் இந்த மிஷன் இயக்கப் பணிகளுக்காக, மிஷனரிகளுக்காக மறக்காமல் ஜெபிக்கலாமே? “இயேசு சீக்கிரம் வருகிறார்”

**குறிப்பு :** தமிழ்நாட்டிற்கு வெளியே பவுலாய் பிரயாசப்பட, கர்த்தரை சேவிக்க, செலவுபண்ண, அறிவிக்க பாரமுள்ளவர்களுக்கு வழிகாட்ட நாங்கள் இருக்கிறோம்.

**A.G தமிழ்பிரதேச மிஷன் இயக்கம்**

*Rev. T.R. John Vincely : 93441 56107; Rev. A. Edwin Prabahar : 94439 79441*
*Rev. J. Samuel Jebaraj : 98421 71014; Rev.S. Thamarai Selvan : 94439 77272*

## தமிழ் பிரதேச மிஷனரி இயக்க அறிக்கை

### மிஷன் பிராந்திய தலைவர்களின் கூடுகை :

2019-ம் ஆண்டிற்கான நமது தமிழ் பிரதேச மிஷன் இயக்க பிராந்திய தலைவர்களின் முதல் கூடுகை கடந்த மார்ச் மாதம் 26-ம் தேதி சென்னையில் வைத்து நடைபெற்றது. இக்கூடுகையில் இந்த ஆண்டிற்கான மிஷன் பணிகளைக் குறித்தும், வருகிற 2020-ம் ஆண்டு நடைபெற உள்ள “மாநில மெகா மிஷன் கன்வென்ஷன்-2020”-க்கான திட்டங்களையும் அதை செயல்படுத்தும் முறைகளையும் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

### Kairos Facilitators Meeting :

4.04.2019 அன்று மதுரையில் நமது ஏ.ஜி. தலைமையகத்தில் வைத்து மிஷன் இயக்க பொறுப்பாளர்களில் ஏற்கெனவே Kairos ஆரம்ப பயிற்சி எடுத்தவர்களுக்கு Kairos Facilitators-க்கான பயிற்சி நடைபெற்றது. Pastor **பாஸ்கர்** (பெங்களூர்) அவர்கள் இப்பயிற்சியை நடத்தினார்கள்.

### மிஷன் கன்வென்ஷன்கள் :

- 24.02.2019 அன்று கோவை தெற்கு மண்டல மிஷன் கன்வென்ஷன் சிறப்பாக நடைபெற்றது. சுமார் 150 பேர் கலந்து கொண்டனர். **Rev.A. சுவர்ணராஜ்** அவர்கள் சிறப்பு மிஷன் செய்தியாளராக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

• 10.03.2019 அன்று தர்மபுரி மண்டல மிஷன் கன்வென்ஷன் நடைபெற்றது. சுமார் 200 பேர் கலந்து கொண்டனர். **Rev.A. எபினேசர்** அவர்கள் சிறப்பு மிஷன் செய்தியாளராக கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

• 6.04.2019 நாகப்பட்டினம் மண்டல மிஷன் கன்வென்ஷன் நடைபெற்றது. சுமார் 125 பேர் கலந்து கொண்டனர். **Rev. தாமரைச் செல்வன்** (மிஷன் இயக்க பொருளாளர்) அவர்கள் சிறப்பு செய்தியாளராக கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

## மிஷன் பிரயாணங்கள் :

◆ மார்ச் மாதம் 5-ம் தேதி முதல் 9-ம் தேதி வரை நமது தமிழ் பிரதேசத்திலிருந்து **Rev.T.R. ஜான் வின்ஸ்லி, Rev.V. பொன்ராஜ், Rev.எட்வின் ஜெயராஜ், Rev.P.ஜான்ரவி** ஆகியோர் மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் விதர்பா (மகாராஷ்ட்ரா) ஆகிய மாநிலங்களுக்கும், மார்ச் மாதம் 18-ம் தேதி முதல் 22-ம் தேதி **Rev.T.R.ஜான் வின்ஸ்லி, Rev.V. லாரன்ஸ் மனோஜ்குமார், Rev. சாமுவேல் ஜெபராஜ்** ஆகியோர் ஒடிசா மாநிலத்திற்கும் சென்று நமது தமிழ் பிரதேசத்திலிருந்து தாங்கி வருகிற மிஷனரிகளை ஒருங்கிணைத்து இரண்டு நாட்கள் கருத்தரங்கு மற்றும் 12 மணி நேர ஜெபங்களை நடத்தி மிஷனரிகளை உற்சாகப்படுத்தி வந்துள்ளார்கள்.

◆ செங்கோட்டை மண்டல போதகர்கள் 16 பேர் **Rev.ஸ்டீவ் ஜெயராஜ்** (தமிழ்பிரதேச உபதலைவர்) அவர்களோடு இணைந்து பஞ்சாப், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களுக்கு சென்று அங்குள்ள மிஷனரிகளுக்கு கூட்டங்களை நடத்தி, உற்சாகப்படுத்தி உதவிகளை செய்து வந்துள்ளார்கள்

◆ மதுரை வடக்கு மண்டலத்திலிருந்து போதகர்களாக டெல்லி, ஹரியானா, மத்தியபிரதேசம், சண்டிகர் ஆகிய மாநிலங்களில் ஜெப யாத்திரை சென்று அம்மாநிலத்தின் இரட்சிப்பிற்காக ஜெபித்து வந்துள்ளனர்.


## Special Thanks

சிவகங்கை மண்டல மிஷன் பொறுப்பாளர் பாஸ்டர் **யோபு சரவணன்** அவர்களின் மூத்த மகள் **ஜெசி கிரேனா** கடந்த 2018-ம் ஆண்டு நடைபெற்ற 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் சிவகங்கை மாவட்டத்தில் முதல் மாணவியாக தேர்ச்சி பெற்று மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து பரிசு தொகையாக பெற்ற ரூ.10,000யை மிஷன் பணிக்காக நன்கொடையாக வழங்கியுள்ளார். **சகோதரி.ஜெசி. கிரேனா** அவர்களுக்கு தமிழ் பிரதேச மிஷன் இயக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## ஜெப விண்ணப்பங்கள்

1. நமது மிஷன் பணித்தளங்களான ரங்குரூங் (சிக்கிம்). ராஜ்நந்காங் (சத்தீஸ்கர்) ஆகிய இடங்களில் நடைபெறவுள்ள ஆலய கட்டுமான பணி தடையின்றி நடைபெற ஜெபிக்கவும்.
2. நமது மிஷன் பணித்தளங்களான கோரக்பூர் (உத்திரபிரதேசம்), தாபி (குஜராத்) ஆகிய இடங்களில் ஆலய கட்டுமான பணிகள் விரைவில் நிறைவேற பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபிக்கவும்.
3. நமது மிஷன் பணித்தளங்களில் சொந்தமாக இடங்கள் வாங்கப்பட, சபைகள் கட்டப்பட ஜெபிக்கவும்.
4. நமது தமிழ் பிரதேசத்திலிருந்து மாதந்தோறும் பொருளாதார உதவி பெறுகிற சுமார் 623 மிஷனரிகள் மற்றும் அவர்களது குடும்பம், விசுவாசிகள் பாதுகாக்கப்பட, ஆசீர்வதிக்கப்பட, மிஷனரிகளை கர்த்தர் வல்லமையாய்ப் பயன்படுத்த ஜெபிக்கவும்.
5. நமது தேசத்தின் வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், சிக்கிம், நாகலாந்து, மணிப்பூர், மிசோராம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் மிஷனரியாக ஊழியம் செய்ய தமிழகத்திலிருந்து அநேகர் புறப்பட்டுச் செல்ல ஜெபிக்கவும்.

## ஜாட், ஹிந்து மக்களினத்திற்காக ஜெபிப்போம்



**மக்கள் இனம்** : ஜாட், இந்து; **மொழி** : ஹிந்தி;

**மக்கள்தொகை** : 19,192,000; **கிறிஸ்தவர்கள்** : 0.03%

**நம்பிக்கை** : இந்தியாவில் வசிக்கும் ஜாட், இந்து இன மக்கள் தங்களது பாரம்பரிய நம்பிக்கையில் உறுதியுடையவர்கள். தங்களது பாரம்பரியத்தின்படி முன்னோர்களை புனிதர்களாக வணங்குகின்றனர்.

**அதிகம் வாழும் பகுதி** : ராஜஸ்தான், ஹரியானா, உத்திரபிரதேசம், பஞ்சாப்

**தத்தெடுத்துள்ள மண்டலம்** : ராதாபுரம்

**மிஷனரிகளின் பணித்தள சாட்சிகள் சில :**

**1. பாஸ்டர், சந்திப் சிங், சாகில், பஞ்சாப்**

எனது சபையைச் சேர்ந்த **சகோ.கோவிந்** அவர்கள் சுவிசேஷ ஊழியத்தில் மிகவும் ஆர்வமுடையவர். அநேகரை சபைக்கு அழைத்து வருபவர். இவருடைய மாமா **திரு.பிரம்,** வயது 50. இவரிடம் பலமுறை சுவிசேஷத்தை சொல்லியும் அவர் அதை ஏற்றுக்கொள்ளாமல் அவமானப்படுத்தி வருவது இவரது வழக்கம். பல கடவுள்களை நம்பிக்கொண்டிருந்தவர். இயேசுவை ஏற்றுக்கொள்ளாமல் வைராக்கியமாய் வாழ்ந்து வந்தார். தொடர்ந்து திரு.பிரம் அவர்களுக்காக சபையில் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. தேவன் திரு.பிரம் என்பவருடைய இருதயத்தை திறந்து தம்மை வெளிப்படுத்தினார். சுவிசேஷத்தை கேட்டு, இரட்சிக்கப்பட்டார். இன்று இவருடன் இணைந்து இவரது குடும்பத்தின் நபர்கள் மொத்தம் 6 பேர் சபைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

இந்த மிஷனரியை தாங்கும் சபை **Rev. மோகன்ராவ்**, அம்பத்தூர் மண்டலம்.

**2. பாஸ்டர் பிலெமோன் பிஷப்**


கடந்த மூன்று மாதங்கள் தீவிர சுவிசேஷ ஊழியத்தை சபையிலிருந்து செய்து வந்தோம். அதின் பலனாக தேவன் சபைக்கு புதிய ஆத்துமாக்களைக் கொடுத்தார். நாங்கள் கடந்த மாதங்களில் சுவிசேஷ ஊழியத்தை செய்து கொண்டிருக்கும்போது, கடன் சுமையால் தற்கொலை செய்துகொள்ள இருந்த சகோதரர் அனில், இவரது மனைவி அனு அவர்களை சந்திக்க தேவன் வழிநடத்தினார். அவர்களது பிரச்சனைகளை கேட்டறிந்து, சுவிசேஷத்தை எடுத்துக்கூறி அவர்களுக்காய் ஜெபித்து வந்தோம். கர்த்தர் அற்புதமாய் கடன் பாரங்களை மாற்றி தற்கொலையின் பிடியிலிருந்து அவர்களை விடுவித்தார். இன்று குடும்பமாய் தேவனை ஆராதிக்கின்றார்கள். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

இந்த மிஷனரியை தாங்கும் சபை : **Rose of Sharon AG Church,** கோடம்பாக்கம்.

**பயிற்சி மிஷனரிகளின் பிரதிஷ்டை :**

மத்திய பிரதேசத்தில் பாஸ்டர் **N.ஸ்டீபன்** அவர்களிடம் பயிற்சி மிஷனரிகளாக அனுப்பப்பட்டிருந்த மூன்று மிஷனரி குடும்பங்கள் தங்கள் பயிற்சியை முடித்து 5.03.2019 அன்று மிகவும் சிறப்பாய் போபாலில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மிஷனரி பிரதிஷ்டை ஆராதனையில் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். அவர்கள் ஹிந்தி மொழியில் சாட்சி சொல்லி, பாடல் பாடி கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். கீழ்க்காணும் இடங்களில் சபை ஸ்தாபிக்க அனுப்பப்படுகிறார்கள்.

1. பாஸ்டர், தங்கராஜ், சிசிலியா தம்பதியர் – அஸ்தா
2. பாஸ்டர். ஜெபராஜ், சுபா தம்பதியர் – ராய்சன்
3. பாஸ்டர். இந்திரகுமார், சங்கீதா தம்பதியர் – விதிசா



முறையான வேதாகம கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு

ADMISSION OPEN

## REGULAR FULL TIME COURSES

### முழு நேர பயிற்சி வகுப்புகள்

முழு நேர ஊழியத்திற்கு அர்ப்பணித்திருக்கும் சகோதரர்களுக்கு

போதனை மொழி: தமிழ்

- இறையியல் பட்டப்படிப்பு
  [Bachelor of Theology]
  தகுதி: 12ம் வகுப்பு காலம்: 3 ஆண்டுகள்
- இறையியல் டிப்ளோமா
  [Diploma in Theology]
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்
- இறையியல் சான்றிதழ்
  [Certificate in Theology]
  தகுதி: 10ம் வகுப்புக்கு கீழ் காலம்: 2ஆண்டுகள்

## EVENING PART TIME COURSES

### பகுதி நேர பயிற்சி வகுப்புகள்

For Both Men and Women

Classes: Monday, Thursday & Friday | 6:30 - 8:30 Pm

போதனை மொழி: தமிழ் மற்றும் ஆங்கிலம்

- MASTER OF ARTS IN CHRISTIAN MINISTRY
  Eligibility: Any Degree | Duration: Two Years
  Medium of Instruction: English
- கிறிஸ்தவ ஊழியம் – முதுகலை
  தகுதி: பட்டபடிப்பு காலம்: 2 ஆண்டுகள்
- கிறிஸ்தவ ஊழியம் – டிப்ளோமா
  தகுதி: 10ம் வகுப்பு காலம்: 2 ஆண்டுகள்

For further information and application form, please contact

Rev. M. Sampath (Vice President, MABC)

MADRAS ASSEMBLIES OF GOD BIBLE COLLEGE

No. 191 (New No. 6), Anna Salai,
Little Mount, Chennai - 600 015, TN.
Phone: 044 - 2235 1646 | 2235 3100
Mobile: +91 - 94442 87322
Email: mabc_edu@yahoo.com



# இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய்

(1 தீமோ.4:6)

**Rev. I. அலெக்ஸாண்டர்**

விஷன் 2020 ஜெப ஒருங்கிணைப்பாளர்

பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். ஆபிரகாமுக்கு ஊழியக்காரன் (ஆதி.24:2), அபிமெலேக்குக்கு ஊழியக்காரன் (ஆதி.20:8). சாலொமோனின் ஊழியக்காரன் (1ராஜா.11:26). பாகாலின் ஊழியக்காரன் (2 ராஜா.10:23) என்று அனேக ஊழியக்காரர்களைப் பற்றி வேதத்தில் வாசிக்கிறோம். ஆனால் பவுல் இங்கே தீமோத்தேயுவிற்கு எழுதும்போது, நீ போதிக்க வேண்டியவற்றைப் போதித்து, விசுவாசத்திற்குரிய வார்த்தை, போதகம், இவற்றில் தேறினவனாகிவிட்டால் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய் என்கிறார் (1தீமோ. 4:6).

புதிய ஏற்பாட்டில் நாம் புது உடன்படிக்கையின் ஊழியக்காரர் அவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்கு சொந்தமான ஜனமாகவும் இருக்கிறோம் என்று 1 பேதுரு 2:9-ல் வாசிக்கிறோம். இரட்சிக்கப்பட்ட நாம் அனைவரும் ஊழியம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். அதே வேளையில் ஊழியங்களிலேயும் வித்தியாசமுண்டு. நாம் எந்த ஊழியத்தைச் செய்தாலும் நாம் மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். யோவான் 12:26-ல் ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார் என்று எழுதியிருக்கிறது.

## நாம் ஜீவனுள்ள தேவனுக்குச் செய்கிற ஊழியம் மகிமையுள்ள ஊழியம் மாத்திரமல்ல அது கனத்திற்குரிய ஊழியம் :

நாம் செய்கிற ஊழியம் நீதியைக் கொடுக்கும் ஊழியம். எனவே அது அதிக மகிமையுள்ள ஊழியம் (2 கொரி.3:9). யோவான் 12:28-ல் பிதாவானவர் கனம் பண்ணுவார் என்று எழுதியிருக்கிறது. இன்று ஊழியர்கள் மூலமும், கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிறவர்கள் மூலமும் கிறிஸ்து கனவீனப்படுத்தப்படுகிறார். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், தேவனுடைய ஊழியர்களாகிய நாம் நம்மை சீர்தூக்கிப்பார்த்து, நம்முடைய குறைகளை சரிசெய்து கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்படுவது மட்டுமல்ல, அநேகரை ஆயத்தப்படுத்த வேண்டியது நமது கடமை. "வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும் தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்" (2 கொரி.4:2) என்று பவுல் கூறுகிறார். நாம் நம்மை தேவனுக்கு முன்பாக உத்தமரென்று விளங்கப்பண்ணவேண்டும்.

....நியாயப்பிரமாண போதகராயிருக்க விரும்புகிறார் (1தீமோ.1:7). போதகராயிருக்க அனேகருக்கு விருப்பம் காரணம் நல்ல மதிப்பு. நல்ல வருமானம், இப்படி எத்தனையோ காரியங்கள் காரணமாயிருக்கின்றன. பவுல் சொல்வதைக் கவனியுங்கள். பிலி.3:7,8-ல் ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். ...எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். வசனம் 11-ல் அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன். கிரியையின் அப்போஸ்தலன் என்று அழைக்கப்படும் யாக்கோபு; என் சகோதரரே,

அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக (யாக்.3:1) என்றார். அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் என்பது உண்மைதான். ஆனால் நாம் எப்படிப்பட்ட ஊழியராக இருக்க தேவன் விரும்புகிறார்.

## தேவன் விரும்பும் ஊழியர் :

உத்தம ஊழியனாய், கொஞ்சத்திலும் உண்மையுள்ள ஊழியக்காரனாய் இருக்க வேண்டும் (லூக்கா 19:17). எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரனாய் இருக்க வேண்டும். ஆயத்தமுள்ள ஊழியராயிருக்க வேண்டும் (லூக்கா 12:37,40). பணிவிடை செய்யும் ஊழியனாயிருக்க வேண்டும் (மத்.20:26,27). சாட்சியுள்ள ஊழியனாயிருக்க வேண்டும் (அப்.26:16). கிறிஸ்துவினிடத்தில் ஊழியத்தைப் பெற்று ஊழியஞ் செய்கிறவனாயிருக்க வேண்டும் (அப்.20:24). மனுஷரைப் பிரியப்படுத்தாத ஊழியக்காரனாயிருக்க வேண்டும் (கலா.1:10). வெட்கப்படாத ஊழியனாய், சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாய் இருக்க வேண்டும் (2 தீமோ.2:15). இன்றும் எத்தனையோ ஆலோசனைகளை வேதத்தில் வாசிக்கின்றோம்.

## போதக நிருபங்கள் போதிக்கும் சத்தியம் :

தீமோத்தேயு, தீத்து நிருபங்கள் போதக நிருபங்கள். ஊழியம் செய்கிறவர்கள் திரும்பத் திரும்ப அந்த நிருபங்களை வாசித்து பயனடைய வேண்டும். இயேசு கிறிஸ்துவை மாதிரியாக நோக்கிப் பார்ப்போம். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்து நமக்காக சிலுவையில் ஜீவனைக்கொடுத்து, பாவங்களிலும், அக்கிரமங்களிலும் மூழ்கிக் கிடந்த நம்மை தம்முடைய ரத்தத்தினால் மீட்டார். ஆனால் நாமோ நம்முடன் உள்ள உடன் ஊழியர்களை நேசிக்க முடியவில்லை. நம்மில் மாற்றம் வேண்டும். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம் (1 கொரி.11:31). நம்மில் ஒருவரும் பூரணரல்ல ஆயினும் பூரணராக முன்னேற வேண்டுமல்லவா? எபே.4:11-13 வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். நமக்கு தெரியாத எதையும் நான் கூறவில்லை.

## நாம் சாட்சியாயிருக்க வேண்டாமா? (அப்.1:8).

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து .....பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். 1 கொரி.11:1-ல் பவுல்-நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள் என்றார். இன்று நம்மில் எத்தனைபேர் இப்படிச் சொல்ல முடியும். 1 பேதுரு 2:21-ல் ....நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்து போனார் என்று எழுதுகிறார் என்று பேதுரு எழுதுகிறார். நாம் என்ன மாதிரியை பின்வைத்துப் போகப் போகிறோம்.

தீமோத்தேயுவுக்கு எழுதும்போதுதான் போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்கிறார். இன்று தேவபிள்ளைகள் மத்தியில் பண ஆசை, பதவி ஆசை, பெருமை, பொறாமை, பாவம் பெருகிவிட்டது. பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிட்டால் இரக்கம் பெறுவோம். எவ்வளவோ ஊழியம் செய்தும், அந்நாளில் நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று என்னைப் பார்த்துச் சொல்லிவிடக்கூடாது.

கற்பனையின் பொருள் சுத்த இருதயம், நல்மனச்சாட்சி, மாயமற்ற விசுவாசம், அதில் பிறக்கும் தெய்வீக அன்பு (1 தீமோ.1:5). இவைகளை நோக்காமல் வீண்பேச்சுக்கு இடங்கொடுத்து விலகிப்போகாமல், உண்மையுள்ள ஊழியராக நம்மை விளங்கப்பண்ண தேவன் நம் அனைவருக்கும் கிருபை செய்வாராக. இயேசு சீக்கிரம் வருகிறார். உன் தேவனைச் சந்திக்க ஆயத்தபடு (ஆமோஸ் 4:12).

# Antioch Biblical Seminary & College

ASSEMBLIES OF GOD

Affiliated with Tamil District Council of SIAG

Accredited by Asia Theological Association (ATA)

## M.Th. Program : *A Non - Residential Course in* Christian Theology

***Wanted : Residential Faculty with M.Th./Ph.D. (ATA / Serampore) in any discipline. (North Indians Preferred)***

| Courses | Duration | Qualification |
| --- | --- | --- |
| B.Th. | 3 Years | 12th Pass |
| M.Div. | 2/3 Years | B.Th. (ATA)/any University Degree |
| Dip.Th. | 2 Years | 10th Pass |





College Reopens in the first week of June 2019

The Registrar

**ANTIOCH BIBLICAL SEMINARY & COLLEGE**

Post.Box-05, Pondicherry University, Pillaichavady,Mathur Road, Puducherry- 605 014.

Office Phone: (0413) 2970521/22/23 Cell: 09488212476 Email: abscollege@gmail.com.

Website: www.antioch.in

# விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள்

அவராலே... மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (2 பேதுரு 1:4).



வேதத்தில் காணப்படும் வாக்குத்தத்தங்கள் வேதப் புத்தகத்தின் முத்துக்களாகும். வேதாகமத்தின் ஒவ்வொரு பக்கமும் தேவனுடைய வாக்குத்தத்தங்களால் நிறைந்து ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. தேவன் நமக்கு தம்முடைய மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களை அருளியிருப்பதாக அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறார் (2 பேதுரு 1:4). கர்த்தரின் வாக்குத்தத்தங்கள் மகா மேன்மையானவை. ஏனெனில் அவைகள் ஆயிரக்கணக்கிலானவை. அவைகள் நம் இருதயத்திற்கு ஆறுதலையும், உற்சாகத்தையும் கொண்டு வருவதால் அவைகள் அருமையும், விலையேறப் பெற்றதுமாய் உள்ளன. அவைகள் நம்மீது தேவன் கொண்டுள்ள அன்பின், கரிசணையின் வெளிப்பாடுகளாம்.

### வாக்குத்தத்தங்களின் பிறப்பிடம் (The Source of Promises)

கர்த்தரே வாக்குத்தத்தங்களை அருளுகிறவர் (2பேதுரு1:4). இவ்வாக்குத்தத்தங்கள் தேவனிடத்திலிருந்து தோன்றுவதன் நிமித்தமாகவே இவைகள் விலையேற பெற்றவைகளாய் இருக்கின்றன. வாக்குத்தத்தங்களை செய்தவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார் (எபிரெயர் 10:23; 11:11). இந்த வாக்குத்தத்தங்களை அளித்த நமது தேவன் பொய்யுரையாதவர் மற்றும் சர்வ வல்லமையுள்ளவர் (எண்.23:19). ஆகவே அவர் அளித்த அனைத்து வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்ற அவர் வல்லமையுள்ளவராய் இருக்கிறார் (ரோமர் 4:21).

### வாக்குத்தத்தங்களின் சாத்தியகூறு (The Scope of Promises)

Dr.எவ்ரெக் யூ.ஸ்டார்ம்ஸ் என்பவரின் கூற்றுப்படி, பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் வாக்குத்தத்தங்களின் மொத்த எண்ணிக்கை 8810 ஆகும். வேதாகமத்தின் அனைத்து பகுதிகளிலும் இவை காணப்படுகின்றன. இவ்வாக்குத்தத்தங்கள் வேதாகமம் முழுவதிலும் நெருக்கமாய் முத்துக்கள் பதிக்கப்பட்டதைப் போல விளங்குகின்றன. கர்த்தர் தமது ஜனங்களை, வாக்குத்தத்தங்களின் வாயிலாக திடப்படுத்துகிறார். மகிழ்ச்சி, துக்கம், சுகவீனம், ஆரோக்கியம், வறுமை, செழிப்பு, பொருளாதாரம், பெலவீனம், குடும்பம், வேலை, அன்பு, உறவுகள் என நம் வாழ்வின் அனைத்து நிலைமைகளிலும் பொருந்தும் வகையிலானவையாக இவ்வாக்குத்தத்தங்கள் இருக்கின்றன. கர்த்தருடைய ஆசீர்வதிக்கப்பட்ட வாக்குத்தத்தங்களால் தொடர்புற முடியாத எந்த ஒரு வாழ்வின் நிலைமையையும் நம்மால் குறிப்பிடவே முடியாது. நம் வாழ்க்கை பயணத்தில் பல்வேறு சவால்களை நாம் எதிர்கொள்ள நேரிட்டாலும் அவை அனைத்திற்கும் பொருந்தக் கூடியதான ஒரு வாக்குத்தத்தத்தை நாம் வேதத்தில் காண முடியும்.

## வாக்குத்தத்தங்களை சுதந்தரித்தல் (The Securing of Promises)

வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுபவர் கர்த்தராயினும் நமக்கும் அதின் பொறுப்புண்டு. அவற்றிற்கான நிபந்தனைகளை நாம் நிறைவேற்றினோம் என்று உறுதி செய்தல் அவசியமாகும். தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரிப்பதற்கான நான்கு வழிகளை நான் உங்களுடன் பகிர விழைகிறேன்.

### 1. ஜெபத்துடன் வேதத்தைப் படியுங்கள் (Study the Bible Prayerfully)

கர்த்தருடைய வாக்குத்தத்தங்களின் கருவூலம் அவருடைய வார்த்தைகளாகிய வேதமே. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் என்னும் ரத்தினங்களை நாம் கண்டெடுக்க வேண்டுமானால் அவருடைய வார்த்தையாம் வேதத்தை ஆழமாய் படித்தல் அவசியமாகும். சிறுமி ஒருத்தி புத்தக அலமாரியில் நீண்ட நாட்களாய் பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருந்த வேத புத்தகத்தை தன் தாயிடம் சுட்டிக்காட்டி, "அம்மா இந்த புத்தகம் யாருடையது?" என்றாள். அந்த கேள்வியினால் திடுக்கிட்ட தாய் அவளிடம், கண்ணே அது தேவனுடைய புத்தகம் என்றாள். அதைக் கேட்ட அச்சிறுமி, "இப்புத்தகத்தை இங்கே யாருமே படிப்பதில்லை. எனவே நாம் இப்புத்தகத்தைக் கடவுளிடமே திருப்பி தந்துவிடலாமே!" என்றாள். இக்கதையில் கேட்டதைப் போலவே, உண்மையில் பலரும் கடவுளுடைய வாக்குத்தத்தங்களைப் பற்றி அறியாதவர்களாகவே இருக்கின்றனர். நாம் தினமும் வேதத்தை வாசிப்பதும், வாக்குத்தத்தங்களைக் கண்டுபிடிப்பதும், அவற்றை இருதயத்தில் பதித்து, நினைவிலே நிலைநிறுத்துவதும் மிகவும் அவசியமானதாகும். "தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது" என்று பவுல் 2 கொரிந்தியர் 1:20ல் கூறுகிறார். ஆயினும் அவற்றைத் தேடி கண்டுபிடிப்பதும், உரிமை பாராட்டி, சுதந்தரித்து கொள்வதும் நமது பொறுப்பாகும்.

### 2. உறுதியாக விசுவாசியுங்கள் (Believe Persistently)

கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரிக்க வேண்டுமெனில் நாம் அவருடைய வார்த்தையை விசுவாசித்தல் வேண்டும். "விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி. 11:6). மேலும் கலாத்தியர் 3:22-ல் ''கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்'' என்று வேதம் கூறுகிறது. நமது முற்பிதாவாகிய ஆபிரகாம், ''தேவனுடைய வாக்குத்தத்தத்தை குறித்து அவிசுவாசமாய் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்" (ரோமர் 4:20, 21). தேவனுடைய வாக்குத்தத்தங்களை சந்தேகிப்பதற்கு எந்த ஒரு காரணமும் இல்லை. ஏனெனில் அவைகள் பொய்யுரையாதவரும், சர்வ வல்லவருமான தேவனால் அருளப்பட்டவை (எண்.23:19). கர்த்தரும் தாம் ஈந்தளித்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற உண்மையும், நீதியுமுள்ளவரென்பதை, கால காலங்களாய், மீண்டும் மீண்டுமாய் நிரூபித்திருக்கிறார் (எபி. 10:23; யோசுவா 21:45; 23:14; 1இராஜா. 8:56).

### 3.நிபந்தனைகளுக்கு உடனடியாக கீழ்படியுங்கள் (Obey the Conditions Promptly)

இரண்டு கால்களின்றி நம்மால் நடக்க இயலாது.ஆவிக்குரிய வாழ்விலும் அப்படியே விசுவாசமும், கீழ்படிதலும் கிறிஸ்தவர்கள் நடக்க உதவும் இரு கால்களாம். கர்த்தரின் வாக்குத்தத்தங்களை பெற்றுக் கொள்ள கீழ்படிதல் மிக அவசியம் என்று எபிரெயர் 10:36 கற்பிக்கிறது. "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" (எபி. 10:36). "அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவருக்கு முன்பாக பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்" என்று 1 யோவான் 3:22 கூறுகிறது. பெரும்பாலும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிபந்தனைக்குட்பட்டவை. நாம் கர்த்தரிடமிருந்து பலன்களை

பெற்றுக்கொள்ளும் முன்பாக நமது பொறுப்புகளை நிறைவேற்றுதல் வேண்டும். உதாரணமாக தேவனுடைய "இரட்சிப்பு" என்கிற மிக உயரிய வாக்குத்தத்தத்தை எடுத்துக்கொள்வோம். நமக்கு இரட்சிப்பு தானாய் வருவதில்லை. நாம் இயேசுவை நம் ஆண்டவர் என்றும், இரட்சகர் என்றும் விசுவாசித்து, நற்செய்திக்கு கீழ்படிய வேண்டும். பழைய ஏற்பாடு முழுவதும் நிபந்தனையுடன் கூடியதான உடன்படிக்கைகளையே கர்த்தர் அருளியிருக்கிறார் (உபா.28). நாம் கர்த்தரிடத்தில் ஒன்றை கேட்டு, இதுவரை பெறாமல் இருப்போமெனில் நம் இருதயத்தை ஆராய்ந்து, நாம் எங்கே, எதிலே கீழ்படிய தவறினோம் என்று நிதானிக்க வேண்டும்.

### 4. பொறுமையுடன் காத்திருங்கள் (Wait Patiently)

ஆபிரகாமைக் குறித்து, "அந்தப்படியே, அவன் பொறுமையாய்க் காத்திருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்" என்று எபிரெயர் 6:15 கூறுகிறது. கர்த்தரின் வாக்குப்படியே ஈசாக்கை பெற்றெடுக்கும் வரை ஆபிரகாம் 25 ஆண்டுகள் காத்திருந்தார். நீங்கள் ஒரு வாக்குத்தத்தம் நிறைவேற அவ்வளவு நெடுங்காலமாய் காத்திருந்ததுண்டா? நாம் தேவனை நெருக்கக் கூடாது. அவர் தமது வேலையை தமக்குரிய நேரத்தில் செய்து முடிக்க அனுமதித்தல் வேண்டும். ஒவ்வொரு வாக்கையும் எப்பொழுது நிறைவேற்ற வேண்டுமென்று அவர் அறிவார். அவருடைய தீர்மானம் மிகச்சரியானது. அவரை செயல்பட அனுமதிப்போமானால் மிகச்சிறந்ததை நமக்கு தருவார். இதற்கு தாவீது ராஜா நல்லதொரு எடுத்துக்காட்டு. "நீ இஸ்ரவேலின் மேல் இராஜாவாக இருப்பாய்" என்று தேவன் தாவீதுக்கு வாக்கு தந்தார். இருப்பினும் தாவீது அவ்வாக்கு நிறைவேற அநேக வருடங்கள் காத்திருக்க நேர்ந்தது. இத்தகைய காத்திருக்குதலின் வாயிலாக தாவீது பொறுமையைக் கற்றுக்கொண்டார். தேவன் ஆதியாகமத்தின் துவக்கத்திலேயே மேசியாவைக் குறித்து வாக்குத்தத்தம் செய்தார். ஆனால், பற்பல நூற்றாண்டுகளுக்கு பிறகு காலம் நிறைவேறிய போதே கிறிஸ்து வெளிப்பட்டார் (கலா. 4:5). கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற நாம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும் (எபி. 10:36). ஏனெனில் "அவர் சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்திருக்கிறார்" (பிரசங்கி 3:11).

"நீங்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது சாய்ந்து கொள்வதனால் அவைகளை உடைத்துவிட முடியாது" என்பது எனக்குப் பிடித்த முதுமொழி. You can't break God's promises by leaning on them. நாம் அவர் வாக்குத்தத்தங்கள் மீது சாய்ந்து கொள்ள வேண்டுமென்றும், அவைகளை அஸ்திவாரமாய்க் கொண்டு நிற்க வேண்டுமென்றும், மேலும் அவைகளை நம்ப வேண்டுமென்றும் தேவன் விரும்புகிறார். அதோனிராம் ஜட்சன் என்ற ஊழியர் ஒருமுறை இவ்வாறு கூறினார், "நமது எதிர்காலம் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களைப் போல பிரகாசமானது." ஆமென்!

– ஆசிரியர்



# நல் நடக்கை

## (Good Behaviour)

Rev. R. நெல்சன் ஞானகுமார்
இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.

"பிள்ளையானாலும், அதின் செய்கை சுத்தமோ செம்மையோ என்பது, அதின் நடக்கையினால் விளங்கும்" (நீதி. 20:11).

**1. உரையாடலின் போது**

◆ குற்றங்கண்டு பிடிப்பது உரையாடலை அணைத்துப்போடும். ஒரு குற்றங்களைக் கூற அதன் இரண்டு பக்கமும் பாராட்டு எனும் வெண்ணெய் தடவிக் கொடுக்க வேண்டும்.

◆ நண்பர் உறவினர் வந்துவிட்டால் தொலைக்காட்சி, டேப் ரிக்கார்டர் போன்றவற்றை நிறுத்திவிடுங்கள்.

◆ நண்பரை சந்திக்கும்போது good morning, good evening, good night, praise the Lord எனச் சொல்லிப் பழகுங்கள்.

◆ உரையாடலின் போது Please, Thank you, Sorry, Excuse me போன்ற வார்த்தைகளை கஞ்சத்தனமின்றி உபயோகிக்கவும்.

◆ ஒரு காரியம் தெரியாவிட்டால் தெரியாது என்று உண்மையை கூறுங்கள். தெரிந்ததுபோல் நடிக்க வேண்டாம்.

◆ பேசிக்கொண்டிருக்கும் போது வேறெங்காவது பார்த்துக்கொண்டிருப்பது, கையில் ஏதாவது வைத்து, ஏதாவது செய்து கொண்டிருப்பது, அடிக்கடி கடிகாரத்தில் மணிபார்பபது தவிர்க்க வேண்டும். அவரது கண்ணைப் பார்த்துப் பேச வேண்டும்.

◆ அழைக்கப்படாவிட்டால் பிறரது உரையாடலில் நாம் கலந்துகொள்ளக் கூடாது.

◆ கொட்டாவி, இருமல், தும்மலை அடக்க முடியாவிட்டால் கைக்குட்டை (Kerchief) வைத்து வாயைப் பொத்திக் கொள்வது நல்லது.

◆ மற்றவர்கள் பேசும்போது விருப்பத்தோடு சிரித்த முகத்துடன் தலையை அசைத்தோ அல்லது சிறிய உற்சாகமூட்டும் வார்த்தைகளுடனோ கேளுங்கள்.

◆ உங்களுக்கு தெரிந்தவரை சந்திக்கும்போது உங்களுடன் இருக்கும் புதியவரை அவருக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

◆ உரையாடலில் நீங்களே பேசிக்கொண்டிராமல் மற்றவர்களும் பேச அனுமதியுங்கள்.

**2. பொது இடங்கள்**

◆ பொது இடங்களில் மூக்கு, பல், காது சுத்தம் செய்வதை தவிர்க்க வேண்டும்.

◆ தேவையின்றி தலை, உடலின் பாகங்களை சொறியக் கூடாது.

◆ மற்றவர்களை, குறிப்பாக பெரியவர்களை, போதகரை கனம்பண்ண முந்திக்கொள்ள வேண்டும்.

◆ பிறர் பேசுவதை ஒட்டுப்கேட்பது, திறந்த கதவுகள், ஜன்னல்கள் திரைகள் வழியாக கண்ணோட்டமிடுவது தவறாகும்.

◆ பொது இடங்களில் மூக்கு சிந்துவது, எச்சில் துப்புவது, குப்பைகளை கண்ட இடத்தில் போடுவதை தவிர்க்க வேண்டும்.

◆ பிறர் அறையில் நுழையுமுன் கதவை தட்டிவிட்டு, அனுமதிபெற்று உள்ளே செல்லுங்கள்.

◆ பிறருக்கு வந்த கடிதத்தை பிரிக்காதீர்கள்.

◆ பிரயாணத்தில் முதியோருக்கும், கைக் குழந்தையுடன் உள்ள பெண்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் இடம் கொடுத்து உதவுங்கள்.

◆ போக்குவரத்து விதிகளை மதித்து நடவுங்கள்.

◆ தெருவில் விரல் சுட்டி பேசுவதை தவிர்க்க வேண்டும்.

◆ கடையில் காசு கொடுத்து பொருள் வாங்கினாலும் அவர்களுக்கு நன்றி செலுத்த தவறக்கூடாது.

◆ ரேசன்கடை, மருத்துவமனை போன்ற இடங்களில் வரிசையில் நிற்கவேண்டியிருக்குமானால், எல்லாருக்கும் முந்திபோக முயற்சிக்காமல் வரிசையில் பொறுமையோடு காத்திருங்கள்.

### 3. உடை உடுத்துதல் மற்றும் அலங்கரித்தல்

◆ துறவி போலவோ அல்லது மிக பகட்டான ஆடைகளையோ அணியாமல் சுத்தமான, தரத்திற்கு ஏற்ற ஆடைகளை அணியுங்கள்.

◆ சாதாரணமான சில ஆடைகளே இருந்தாலும், சுத்தமாக தேய்த்து உடுத்துங்கள். வியர்வையான துணிகளை அணியக்கூடாது. குறிப்பாக, உள்ளாடைகள் சுத்தமாக இருப்பது அவசியம். இதனால் பொது இடங்களில் உடலை சொறிவதை தடுக்கலாம்.

◆ அளவுக்கு மீறிய அலங்காரம் அழகை கெடுக்கும். அளவுக்கதிகமாக அலங்கரித்தால் தேவையற்ற ஈக்கள் வந்து மொய்க்கும்.

◆ உங்களுக்கே உரித்தான இயற்கையான முகபாவனை. பேச்சு, சிரிப்பு, ஸ்டைலோடு இருப்பதுதான் கவர்ச்சிகரமானது. மற்றவர்களை காப்பி அடிக்காதீர்கள்.

◆ தினமும் குளிக்க வேண்டும். தூங்குமுன் குளிப்பதனால் அழுக்கும், வியர்வையும் அடுத்த 8 மணிநேரம் சருமத்தில் ஒட்டியிருப்பதை தவிர்க்கலாம்.

◆ சீப்பு, சோப்பு, சேவிங் பிளேடு, டவல் போன்றவை தனிப்பட்ட சொந்த பொருளாக அல்லது பிறர் பயன்படுத்தாததாக இருப்பது நல்லது.

◆ கழிவறைகளை உபயோகிக்கும் முன்பும், பின்பும் தண்ணீர் தாராளமாய் ஊற்றி சுத்தம் செய்தல் வேண்டும்.

### 4. சாப்பிடும்போது

◆ உணவருந்து முன் கை கழுவுங்கள். சாப்பிட்டவுடன் வாய் கொப்பளியுங்கள். வெளியே புசிப்பதிலும் வீட்டு உணவே பாதுகாப்பானதாகும்.

◆ ஆகாரத்தைமென்று சாப்பிடும்போது சத்தம் வராமல் சாப்பிட பழகுங்கள்.

◆ நண்பர்களோடு சாப்பிடும்போது சீக்கிரம் சாப்பிட்டு முடித்து எழுந்திருக்க நேர்ந்தால் பக்கத்திலுள்ளவர்களிடம் சொல்லிவிட்டு எழுந்திருங்கள்.

◆ கிடைக்கும் உணவு எதுவானாலும் அதை வெறுக்காமல், விமர்ச்சிக்காமல் அளவாய் சாப்பிடுங்கள்.

◆ கரிவேப்பிலை, எலும்பு போன்றவற்றை மேசையிலோ, தரையிலோ போடாமல் தட்டிலேயே ஒரு ஓரத்தில் அல்லது அதற்கென ஒரு சிறு தட்டு வைத்து, அதில் போடுவது நல்லது.

◆ வாயூறவைக்கும் உணவைக் கண்டதும் இச்சையடக்கத்தை இழந்துவிடாதீர்.

◆ விருந்தினர் வேண்டாம், வேண்டாம் என்று சொல்லச் சொல்ல அவர்களை கட்டாயப்படுத்தி சாப்பிட வைப்பது தவறான விருந்தோம்பலாகும்.

◆ சாப்பிட்டவுடன் விரலையோ, தட்டையோ நக்காமலிருப்பது நல்லது.

# SFC மாணவர் சீஷத்துவ முகாம் நடைபெறும் மண்டலங்கள் மற்றும் நாட்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புதுக்கோட்டை | ஏப்ரல் 2,3 | தஞ்சாவூர் வடக்கு | ஏப்ரல் 29, 30 | தேனி | மே 14,15 |
| விருதுநகர் | ஏப்ரல் 15 | காஞ்சிபுரம் | மே 6,7,8 | ராதாபுரம் | மே 14,15 |
| சாத்தூர் | ஏப்ரல் 22,23,24 | திருநெல்வேலி | மே 6,7,8 | கடலூர் | மே 14,15,16 |
| திருச்சி | ஏப்ரல் 22,23,24 | ஈரோடு | மே 7,8 | கிருஷ்ணகிரி | மே 14,15,16 |
| வில்லிவாக்கம் | ஏப்ரல் 22,23,24 | நெய்வேலி | மே 7,8 | சென்னை வடக்கு | மே 14,15,16 |
| சதர்ன் டிஸ்ட்ரிட் | ஏப்ரல் 22,23,24 | தஞ்சாவூர் தெற்கு | மே 7,8 | ஓசூர் | மே 14,15,16 |
| மதுரை வடக்கு | ஏப்ரல் 22,23,24 | நீலகிரீஸ் | மே 7,8,9 | பெரம்பலூர் / | மே 14,15,16 |
| செங்கோட்டை | ஏப்ரல் 22,23 | பாண்டிச்சேரி | மே 7,8,9 | அரியலூர் | |
| அம்பை | ஏப்ரல் 23,24 | சீர்காழி | மே 7,8,9 | திருவண்ணாமலை | மே 21,22 |
| ராம்நாடு | ஏப்ரல் 23,24 | சத்தியமங்கலம் | மே 7,8,9 | மதுரை மேற்கு | மே 20,21,22 |
| சேலம் | ஏப்ரல் 23,24,25 | தாம்பரம் மேற்கு | மே 7,8,9 | கோவை தெற்கு | மே 20,21,22 |
| மதுராந்தகம் | ஏப்ரல் 23,24,25 | சென்னை தெற்கு | மே 8,9,10 | நாகர்கோவில் | மே 21,22,23 |
| கோவை வடக்கு | ஏப்ரல் 24,25 | (தமிழ்) | | புளியங்குடி | மே 27 |
| செங்கல்பட்டு | ஏப்ரல் 24,25 | சென்னை தெற்கு | மே 8,9,10 | சிவகங்கை | மே 27,28 |
| தாம்பரம் கிழக்கு | ஏப்ரல் 24,25,26 | (ஆங்கிலம் | | நாசரேத் | மே 27,28,29 |
| செங்கல்பட்டு (தனி) | ஏப்ரல் 24,25,26 | திண்டுக்கல் | மே 13,14 | பாளையங்கோட்டை | மே 27,28,29 |
| திருவாரூர் | ஏப்ரல் 25,26 | திருப்பூர் | மே 13,14 | திருவள்ளூர் | மே 28 |
| நாமக்கல் | ஏப்ரல் 26, 27 | மதுரை தெற்கு | மே 13,14,15 | பெரியகுளம் | மே 28,29 |
| தர்மபுரி | ஏப்ரல் 29, 30 | தாம்பரம் சென்ட்ரல் | மே 13,14,15 | வேலூர் | மே 28,29,30 |
| கோவில்பட்டி | ஏப்ரல் 29, 30 | அம்பத்தூர் | மே 13,14,15 | ஓட்டப்பிடாரம் | ஜூன் 5 |
| விழுப்புரம் | ஏப்ரல் 29, 30 | | | | |

பெண்களுக்கான....

# திரித்துவ வேதாகமக் கல்லூரி

(A Theological Institution of the Tamil District Council of SIAG)
Accredited by Asia Theological Association (ATA)
Kanakkapillaivalasai, Sengottai, Tamilnadu – 627 809

| Course | Duration | Eligibility |
|---|---|---|
| Diploma in Theology (Dip.Th.) - Tamil | 2 Years | S.S.L.C Pass |
| Bachelor of Theology (B.Th.) - English | 3 Years | HSC (+2) Pass |
| Master of Divinity (M.Div.) English | 3 Years | Any Bachelor Degree |

இரட்சிப்பு, ஞானஸ்நானம்,
பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற,
ஊழிய அழைப்புடைய 18 வயது நிரம்பிய
பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!
திரித்துவ வேதாகமக் கல்லூரி, மாணவிகள் தங்கி படிப்பதற்கான
சிறந்த, நவீன வசதிகளைக் கொண்டுள்ளது.
அர்ப்பணிப்புள்ள சிறந்த கல்வித் தகுதியுடைய ஆவிக்குரிய,
அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப்படுகிறது.

விண்ணப்பப் படிவங்கள் ஆயத்தமாய் உள்ளன!
பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள்
வந்துசேர வேண்டிய

**கடைசி நாள் : மே 15, 2019**

விண்ணப்பப் படிவங்கள்
நேரில் பெற ரூ.130/- ; தபாலில் பெற ரூ.150/-

தொடர்பு :
The Registrar
**Trinity Bible College**
Kanakkapillaivasai, Post Box No. 25, Sengottai - 627 809
Phone : 04633 - 234243 & 95244 26186

## சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ



**பாஸ்டர். பெவிஸ்டன்**
பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்

அருமைச் செல்வங்களே! இந்த விடுமுறை காலங்களில் உங்களை சந்திப்பதில் எனக்கு மிகுந்த சந்தோஷம். பரீட்சையெல்லாம் எழுதி முடித்திருப்பீர்கள். நல்ல ரிசல்ட் பெற்று தேசத்தில் உயர்ந்திருக்க வாழ்த்துகிறேன். வாங்க ரிலாக்ஸா ஒரு கதை கேட்கலாம்.

பசியோடு நீந்தி களைத்த குட்டி மீன் சோனு அந்த கொளு கொளு புழுவைக் கண்டதும் பேரானந்தம் கொண்டது. அதன் அருகில் நீந்தியது. தனது வெகுநேர பசிக்கு நல்ல விருந்து மிதந்து வருவது அதற்கு அளவில்லா ஆனந்தத்தைக் கொடுத்தது. "இன்று நல்ல சாப்பாடு.... ஒரு பிடி பிடித்துவிடுவேன்!" என்று எண்ணிக்கொண்டு அந்த தூண்டிலில் உள்ள புழுவை நோக்கி விரைந்து சென்றது சோனு. ஆனால், சோனுவின் மூத்த நண்பர்கள் தொங்கும் புழுவை உண்ண வேண்டாம். "அது ஆபத்து.... நீ அதனை சாப்பிட்டால் வாயில் கம்பி குத்தும்..... செத்து விடுவாய்... " என்று கூறிய வார்த்தைகளையும் மனதில் ஒரு நிமிடம் யோசித்தது. இருப்பினும், புழு மிகவும் அருகில் கொழு கொழுவென மிதந்தது. இந்த பெரிய மீன் அண்ணன்கள் சொன்னது பொய்யாக கூட இருக்கலாம். நான் இதனை சாப்பிட்டால் அவர்களுக்கு உணவு கிடைக்காமல் போய்விடும் என்ற அச்சத்தில் என்னை பயமுறுத்தி இருக்கலாம்..... என்று சோனு தனக்குள் சமாதானம் செய்துகொண்டு புழுவின் அருகில் நெருங்கியது. அப்பொழுது சோனுவின் மாமா சீனு வேகமாக வந்து சோனுவை அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றியது. சோனு உன்னிடம் எத்தனை முறை சொல்லிருக்கோம்... அந்த புழுவை சாப்பிட வேண்டாம்னு... ஏன் நீ கேட்காமல் போனாய்?.... என்று கோபத்துடன் கேட்டது. அதற்கு சோனு, "நான்.... நான்... நினைத்தேன் நீங்கள் என்னை ஏமாத்தரிங்கனு...." என்றது பயத்துடன். நீ என்னோடு கடலின் கரைபக்கம் வா... உண்மை புரியும்.... என்று கூறி சோனுவை இழுத்துச் சென்றது. அங்கே ஏராளமான மீன்கள் செத்து மிதந்து கொண்டும், புழுவை வைத்து சாப்பிட முடியாமல் தூண்டில் குத்தப்பட்ட வாயோடும்.... வானத்தின் பறவைகளுக்கு இரையாகி கொண்டும் இருந்தன. "பார்த்தாயா சோனு.... நீ கண்ட புழு உணவு அல்ல, உன் உயிரை பறிக்கும் சத்துரு. நீ எங்களை நம்பாமல் இருப்பது வேதனை அளிக்கிறது. இந்தக் காட்சியைப் பார்த்தாவது திருந்து..." என்று கூறி விட்டு சென்றது.

ஒரு சில வாரம் நல்ல பையனாக இருந்தது சோனு. ஆனாலும்... நாளுக்குநாள் வித்தியாசமான கொழு கொழு புழுக்களைப் பார்த்து நாக்கில் எச்சி ஊறியது. ஒருநாள் சோனு இப்படியாக யோசித்தது. நான் அறிவாளி.... தூண்டிலில் சிக்காமல் புழுவை மட்டும் வேகமாக கொத்திக்கொண்டு வரும் திறமை என்னிடம் உள்ளது. அந்த பெரிய மீன்கள் சோம்பேறிகள். அதனால் தான் தூண்டிலில் சிக்கி விட்டனர். என் திறமையை இந்தக் கடலுக்கு காட்டுகிறேன் என்று சபதம் போட்டுச் சென்றது. தூண்டிலில் தொங்கிய புழுவை பிடித்து ஒரு வாய் சுவைத்து. ஆஹா.... என்ன அருமையான ருசி.. என்று சொல்லி முடிக்கும் முன்னர் யாரோ மேலே இழுப்பது போன்று இருந்தது. அந்தோ பரிதாபம்.... சோனு தூண்டில் புழுவிற்கு

இரையானது. குட்டி தம்பி, தங்கை தூண்டில் புழுபோல சாத்தான் அநேக காரியங்களை ஒவ்வொரு நாளும் நம்முடைய வாழ்க்கையில் கண்முன் கொண்டு வருவான்... ஆனால் அதில் மயங்காமல் வேத வசனம் சொல்லுகிறபடி நல்ல பிள்ளைகளாக இருக்கணும்.

அருமை தம்பி தங்காய்... நீங்கள் யாரோ ஒருவரால் கண்காணிக்கப்படுகிறீர்கள். இது எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய காலம். உங்கள் முன் இருக்கிற பிரகாசமான எதிர்காலத்தை அழிக்க ஏராளமான வலைகளை விரித்து. பிசாசு காத்திருக்கிறான். இந்த விடுமுறை காலங்களில் நீங்கள் எங்கிருந்தாலும் தேவனை சார்ந்து கொள்ளுங்கள். உங்கள் பெற்றோர் அனுமதிக்காத எங்கும் நீங்கள் செல்வதை தவிர்த்து விடுங்கள். எனக்கு எல்லாம் தெரியும், நான் இப்படி தான் இருப்பேன் என்று சோனு போல உங்கள் கண்களுக்கு இனிமையானதை தேடி நல்ல எதிர்காலத்தை இழந்துவிடாதிருங்கள்.

**“தீமையை விட்டு விலகுவதே செம்மையானவர்களுக்குச் சமனான பாதை; தன் நடையைக் கவனித்திருக்கிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான்” (நீதி. 16:17).**

நிச்சயம் இந்த கதை பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை குறுஞ்செய்தி மூலம் 97503 81784 இந்த எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். அடுத்த இதழில் மற்றொரு கதையோடு உங்களை சந்திக்கிறேன். Byee....

---

## *8 Rules for Spiritual Growth*

Eight rules that promote good health in babies can be adapted and applied to a Christian's spiritual growth.

1. **Daily Food.** Take in the "pure milk of the word" through study and meditation (1 Pet. 2:2).
2. **Fresh Air.** Pray often or you will faint. Prayer is the oxygen of the soul (1 Thess. 5:17).
3. **Water.** We must be filled with the Holy Spirit (John 7:38, 39).
4. **Regular Exercise.** Put into practice what you learn in God's Word. Witness for Jesus (James 1:22).
5. **Adequate Rest.** Rely on God at all times in simple faith (Mark 6:31).
6. **Clean Surroundings.** Avoid evil company and whatever will weaken you spiritually (Eph. 5:11).
7. **Loving Care.** Be part of a church. Benefit from a pastor's teaching and Christian fellowship (Heb. 10:25).
8. **Periodic Check-ups.** Examine your spiritual health (1 Cor. 11:31).



# Your kids are J Kids

**Rev. பெகின் சாமுவேல்**
(AGCM Director)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தருடைய பெரிதான கிருபையாலும், உங்களின் ஜெபத்தாலும் தேவன் இவ்வருடத்தின், AGVBS ஆயத்தங்கள், பயிற்சிகள் எல்லாவற்றையும் மிக சிறப்பாக முடிக்க உதவி செய்தார். இம்மாதத்திலும் தொடர்ந்து ஸ்தல சபைகளில் நடக்கும் AGVBS ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளை அனுப்பி வையுங்கள். உங்கள் பங்களிப்பும் இந்த ஊழியங்களில் ஏதாவது ஒரு வகையில் இருக்கட்டும்.

இந்த வருடத்திற்கான AGVBS தலைப்பு J Kids (Jesus' kids). அதாவது இயேசுவின் பிள்ளைகள் ஆகும். சிறுபிள்ளைகளை சிறுவயது முதலே இயேசுவின் பிள்ளைகளாக மாற்றுவதே இந்த வருட AGVBS ன் நோக்கமாகும். லூக்கா 2:40-ல் 'பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன் கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர் மேல் இருந்தது' என்று இயேசு கிறிஸ்துவைக் குறித்து வாசிக்கிறோம். எனவே, பிள்ளைகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவின் பிள்ளைகளாக வாழ்வது மிக அவசியம். இந்த AGVBS நாட்களில் மட்டுமல்லாது தொடர்ந்து பிள்ளைகள் கிறிஸ்துவின் பிள்ளைகளாக வாழ வைப்பதில் பெற்றோரின் பங்கு மிக முக்கியமானது. அதைப் பற்றித்தான் தொடர்ச்சியாக நாம் பார்ப்போம்.

ஒவ்வொரு பிள்ளைகளும் இந்த உலகில் பிறக்கும்போது ஒரு உன்னத நோக்கத்துடன்தான் தேவனால் கொடுக்கப்படுகிறது. வேதாகமத்தில் மோசே என்னும் இரட்சகனை அனுப்பி அடிமைப்பட்டிருந்த ஜனங்களை விடுவிக்க தேவன் சித்தமானார். அதனால் அந்த பிள்ளையை ஒவ்வொரு நாளும் தேவன் எவ்வாறு பாதுகாத்து வந்தார், அவரைக் குறித்து தேவன் வைத்ததான நோக்கம் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

## உங்கள் பிள்ளைகள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (Your children are chosen by God)

கர்த்தர் உங்கள் கையில் கொடுத்திருக்கிற பிள்ளைகள் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். நீங்கள் அவர்களை உங்கள் பிள்ளைகளாக தெரிந்து கொள்ளவில்லை. தேவன் அவர்களை தாயின் கருவில் உருவாகுமுன்னே தெரிந்தெடுத்து உங்களுக்கு அவர்களை ஈவாக கொடுத்திருக்கிறார். தாவீதை அவனுடைய தகப்பன் தெரிந்து கொள்ளவில்லை. ஈசாய்க்கு தாவீது என்று ஒரு மகன் இருந்ததையே மறந்து போனான். ஆனால் கர்த்தர் அவனைத் தெரிந்து கொண்டிருந்தார். உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் இருந்தாலும், ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். தேவன்

அவர்களைத் தெரிந்தெடுத்து உங்களுக்கு கொடுத்திருக்கிறார். அவர்கள்

ஒவ்வொருவரும் தேவனுடைய பார்வையில் மிகவும் விசேஷமானவர்கள். அவர்களை அற்பமாக எண்ணாதிருங்கள். அவர்களை உங்களுடைய பிள்ளைகளாக அல்ல, பரலோக ராஜாவினுடைய பிள்ளைகளாக பாருங்கள்.

### உங்கள் பிள்ளைகள் தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர்கள் (Your children are anointed by God)

அடுத்ததாக நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று. நம்முடைய பிள்ளைகள் தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர்கள். தாவீதை தேவன் ஆராதனை வீரனாக அபிஷேகித்து வைத்திருந்தார். அவன் சுரமண்டலத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தால் சவுலுக்குள் இருந்த அசுத்த ஆவி அலறியடித்து ஓடும் அளவுக்கு தேவனுடைய அபிஷேகம் அவன் மேலிருந்தது. அருமையான பெற்றோர்களே, உங்களுடைய பிள்ளைகள் ஒரு உன்னத நோக்கத்துடன் தேவனால் அபிஷேகிக்கப்பட்டிருக்கின்றனர் என்று உங்களுக்கு தெரியுமா?

### உங்கள் பிள்ளைகள் பரலோகத்திற்கு சொந்தமானவர்கள் (Your children belong to heaven)

கிறிஸ்துவுக்குள் வாழும் நம் ஒவ்வொருவரின் நோக்கமும் பரலோகத்தை அடைவதுதான். பரலோகமே நமது வாழ்க்கைப்பயணத்தின் destination. சாத்தான் உலக காரியங்களால் பிள்ளைகளை சிறு வயதிலேயே வஞ்சித்து, கண்களுக்கும், மனதுக்கும் பிரியமான காரியங்களை காண்பித்து, அவனுக்கு சொந்தமாக்கி அவனும், அவனைச் சேர்ந்தவர்களும் இருக்கும் நரகத்தின் பாதையில் அழைத்து செல்ல முயற்சிக்கிறான். தாவீதும் கூட பிசாசின் வஞ்சக வலையில் சிக்க நேர்ந்தது. ஆனாலும் தேவகிருபையினால் அவன் தப்பி பிழைத்துக் கொண்டான். பரமனின் இருதயத்திற்கு ஏற்றவனாக மாறினான். இந்த காரியத்தில் பிள்ளைகளுக்கு பெற்றோர்களுடைய வழிநடத்துதல் மிகவும் அவசியம். இக்காலங்களில் நம்மைச் சுற்றி காணப்படுகிற மாய வலைகளைக் குறித்து பிள்ளைகளோடு பேசுங்கள். உங்கள் பிள்ளைகளை ஜெபத்துடனுடம், தேவ பக்தியுடனும் வளர்த்திடுங்கள். நிச்சயமாக தேவன் அவர்களை பரலோகத்திற்கு பாத்திரவான்களாக மாற்றுவார்.

தேவ கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

### அறிவிப்பு

உங்களுக்கு AGVBS Materials, CD மற்ற உபகரணங்கள் தேவைப்பட்டாலும், AGVBS Final day நடத்துவதைக் குறித்த காரியங்களுக்கும் நீங்கள் எங்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

---

**தேவை - WANTED**

மதுரையிலுள்ள நமது தமிழ்நாடு ஏ.ஜி. வேதாகமக் கல்லூரிக்கு
இரட்சிக்கப்பட்ட, நல்ல அனுபவமுள்ள சமையல் மாஸ்டர் தேவை.
கல்லூரியிலேயே தங்கி உதவி செய்ய விரும்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்

**0452 2601940**

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர், **பரிபூரண ஜீவன்,**
43/3 ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சி - 17
செல் : 94434 15484

## போட்டி எண்–76 சரியான விடைகள் (சங்கீதம் 101–150)

(1).உம்முடைய கற்பனையோ; (2).ஆடுகள்; (3).ஆந்தை (4).நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்து கொள்ளட்டும். (5).ஆத்துமா; (6).பிள்ளைகள்; (7).குன்றுகள்; (8).சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது; (9).வீட்டின் மேல் முளைக்கும் புல்; (10)இரட்சிப்பு; (11).பெருங்காற்று; (12) நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது தேவனைக் கீர்த்தனம்பண்ணுகிறது நல்லது; (13).ஆசீர்வாதத்தை விரும்பாமற் போனான். அது அவனுக்கு தூரமாய் விலகிப்போம் (14).பால சிங்கங்கள்; (15).அவருடைய நாமம்; (16).அவருடைய சொல்; (17).விக்கிரகங்கள்; (18).கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம்; (19).பூமி; (20). வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே (21).மனுஷனுடைய நாட்கள்; (22).கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது; (23) உம்முடைய நியாயத்தீர்ப்புகள் (24).தவளைகள்; (25)(i).அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும் நீர் விளம்பின வேதமே எனக்கு நலம். (ii).மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம். (iii) பிரபுக்களை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே

## போட்டி எண் : 76 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை :** கந்தையா; G.முத்துலெட்சுமி; குளோரி பேபி; சித்ரா பிளஸ்சி; கோமதி சங்கர்; கனகவல்லி; கோகிலா; S.முத்துலெட்சுமி; கிரிஜா; சுபா; A.மஞ்சு; டோரா; சுமதி; மரகதம்; ராதாமணி; புஷ்பவல்லி; K.மஞ்சு; E.கலா; T.கலா; S.ஜெயா; பியூலா; | **ஸ்ரீ வில்லிபுத்தூர்** : ஜெசிக்கா ஆக்னஸ்; இவாஞ்சலின் ஆக்னஸ்; காபிரியேல்; பொன்ராஜ்; நாச்சியார்; சாத்ராக்; ஷேரன்; கிரேஸி; நெல்சன் செல்வராஜ்; ஜெயராணி; அனிதா; பாஞ்சாலி; ஆபிரகாம்; ஞானம்; நித்யா; சத்யா; | **ஆலங்குளம்** (V): ஸ்டீபன்; ரோனா; லதா; உமாரோஸ்லின்; தங்கம்; ரெஜினாசாரு; பிளாரன்ஸ்; ஸ்டெல்லா; பிரபா; கிருபா; | **இறச்சகுளம்** : தர்ஷினி; கலா; ஷோபா; ராதிகா; காயத்ரி; கனகமணி; அமலா வேணி; ஜெஸ்மின்; மகிழ்ஜெயந்தி; |**திண்டிவனம்** : சாராள் அறிவுசெல்வி; மோசஸ்; ஜெனிதா; டீனா மேரி; சர்மிளா; கிரேஸி; பரிமளா; கெத்சியாள்;|**அந்தமான்** : சந்தியா; தங்கமணி; ஸ்டெல்லா மேரி; விஜய்; ஜேக்லின்; கெத்சியாள்;|**கடையநல்லூர்** : செல்வி இந்திராணி; தங்கராஜ்; ஆஷாதேவி; மேரிகுட்டி; வினோலியா; ஜெபசீதாலெட்சுமி; ஸ்டெல்லா; |**திருச்சி** : தங்கலதா; கிறிஸ்டி மகாலஷ்மி; தனபாக்கியவதி; மேரி சுஜாதா; கிறிஸ்டி; குளோரி; சாந்தி; அனுஷியா; |**கிருஷ்ணகிரி** : அனிதா ஷைலா; அருள்மொழி; அபிநயா ஜெர்சிஸ்; ஜடா; ரேச்சல் அனுசுயா; ஆனி மெர்சி; |**மதுராந்தகம்** : கிரேஸ் பியூலா; மெர்ஸி; புவனேஸ்வரி; சுனிதா ரோஸ்லின்; நேசம்; சுந்தரி; |**சென்னை** : மெர்லின் ஹெலன் பிரீத்தியா; சாமுவேல் பாஸ்கரன்; மரகதலீலா;

## போட்டி எண் : 76 (சரியான விடை எழுதியவர்கள்)....

ஜெனிஷியா; நர்மதா தேவி; |**திருநின்றவூர்** : எழிலரசி; வின்சி; சுமதி; அம்மு; ஜஸ்டின் பீட்டர்; |**நாசரேத்** : தாசன் மோசஸ்; வசந்தா; செல்வராணி; மெர்சி; தேவகிருபை கலா; எஸ்தர்; பரிபூரணம்; |**சாத்தூர்** : கீதா வசந்தகுமாரி : மேரி; சங்கீதா; சரோஜா; |**தூத்துக்குடி** : சகாய மேரி; புருஷிமா; ஆலிஸ்; பொன்னம்மாள்; |**பெருங்குளம்** : ஜெயலின் சிங்; பியூலா ஜெபாய்; எப்சிபா; ஜெபா; |**தேனி** : ராகேல் : திரவியச்செல்வி; தனம்; கிருபா; **வில்லியனூர்** : ஷீபா; புரோனிக்கா; செல்லப்பன்; |**S.P.கோயில்**: தனலட்சுமி; ஊர்வசி; செலின்சாராள்; |**ஆண்டிபட்டி** : மேரி; தேவபாக்கியம்; புளோரியா;| **கிச்சிப்பாளையம்** : சாரோன் ஜெயரூபி; ராணி; ஜெரின் ஜெயசீலி;|**பெருந்துறை** : கெத்சியாள்: இந்திரா; ஸ்டெல்லா; |**தஞ்சாவூர்** : விஜி; ஜமுனா; சலோச்சனா;| **பேயன்விளை** : பிரேமா; ஜாய்ஸ்மேரி; பானுமதி; |**புளியங்குடி** : சுந்தரி; ஜெயமணி; ஞானமணி; |**வத்ராப்** : கிறிஸ்டி; அருள்செல்வி; |**வெள்ளன்டிவலசை** : ஸ்டீபன்; ஜோஸ்ப் மேரி; |**எடப்பாடி** : மாலதி; எப்சிபா; |**கொட்டாங்குளம்** : ரக்ஷனா; ஜெபமேரி; |**நாகர்கோவில்** : அன்னம்மாள்; லீதியாள்; |**மம்சாபுரம்** : மீரா; சத்யப்பிரியா; |**வந்தவாசி** : அபிஷாசுமதி; ஜூலியட்; |**காரைக்கால்** : ராஜாமணி; உமா; |**வடக்கு ஆத்தூர்** : மகேஸ்வரி; ரூத் பாக்யவதி; |**மடத்துக்குளம்** : ஜீன் மெரிலின்கிருபா; பிரீத்தி; |**அச்சிறுப்பாக்கம்** : தமிழ்ச்செல்வி; ரேஷ்மா; இலக்கியா;| **இடப்பாடி** : ரூத்; சுதா; **அன்னூர்** : ரூத் ரத்னா; கிரேஸ் பேன்சி; |**ஆலங்குளம்** (T): மெர்லின் சக்திபாலா; ஜான்சன்; |**T.N.பாளையம்** : ஜெயபொன்னி; சுஜா;| **பள்ளிக்கரணை** : ஜெயலஷ்மி; சார்லட்; |**திருத்துறைப்பூண்டி** : தனலெட்சுமி; மெர்லின்; |**முத்தையாபுரம்** : ஜீவிதா; மங்களம் : |**நாகமலை** : ஹில்டா : விஜிலா; மரியரூபி பிளாரன்ஸ்; |**வெள்ளாளன்விளை** : அன்பு துரைராஜ்; ஞானமணி எப்சிபா; |**ஆறுமுகநேரி** : கஸ்தூரி : சுகிர்தா; |**திருநெல்வேலி** : விமலா; மெரில் ஆலிஸ்; ஆஷா டிட்டோ; |**மதுரை** : லூயிஸ்; |**தர்மபுரி** : ரூத்;| **காளையார்கோவில்** : அருளானந்தம்; |**வடக்குகோணம்** : மரியநேசம்;| **வடக்கன்குளம்** : வின்சென்ட்செல்வி; | **சூளைமேடு** : அருள்மேரி; **அகஸ்தியர்பட்டி** : பத்மாவதி; |**அம்பலவாணபுலம்** : நிர்மலா; |**கொங்கந்தான்பாறை** : சந்திரா; **உடுமலை** : ஜான்சி ; |**பரமன்குறிச்சி** : செல்வி; |**அம்பாசமுத்திரம்** : ஹரிலீலா; லீலா; |**பெரியகுளம்** : மனோகாசி; |**களக்காடு** : வசந்தா; |**சீவலப்பேரி** : புதியமுத்து; |**பழையகாயல்** : சிந்தியா; எலிசபெத்; |**லால்குடி** : அடைக்கலம்;| **காமராஜபுரம்** : சிந்துஜா; |**தேனிமலை** : சுகுனா; |**காதக்கிணறு:** இந்திரா;| **V.K.புதூர்** : கலா; |**ஜலகண்டபுரம்** : சங்கீதா; |**திசையன்விளை** : ஜெயசீலி;| **கோயம்புத்தூர்** : கிறிஸ்டினா அபிகாயில்; |**பூண்டி** : அமுதா; |**நொச்சிக்குட்டை**: சங்கீதா; |**அவனாசிலிங்கபுரம்** : கீர்த்தனா; |**கடாட்சபுரம்** : ரேவதி ; |**பழனி** : சாந்தி;| **குரோம்பேட்டை** :ஜோதி; கீதா; |**புதுச்சேரி** : குப்பம்மாள்; மேரி ஜான்சி; |**நெல்வாய்** : ஆல்வின் பாண்டியன்; |**அரசூர்** : ரோஸ்லின்; |**விருத்தாசலம்** ; சுகிர்தா; |**ஓசூர்** : ரித்திஹா; |**இடையன்குளம்** : வலயட்மேரி; |**டோனாவூர்** : அல்போன்ஸ்; **உவரி** : சுபத்ரா; |**வேலூர்** : ஜெபகனி; |**சின்னாளப்பட்டி** ; சலோமி; |**இடையர்பாளையம்** : மேரி; |**சிட்டலப்பாக்கம்** : தாமரைச்செல்வி;| **பெங்களூர்** : தேவபிரியா; |**திருக்கச்சூர்** : ஜெயந்தி; |**சவுரியூர்** : ஜான்வெஸ்லி; **தாழக்குடி** : சாந்தி; |**தென்காசி** : சீதாலட்சுமி; |**திருப்பத்தூர்** : நிர்மலா; ரூத் தெய்வனாய்;|**கன்னியாகுமரி** : சினேகலதா; |**கிடங்கல்** : சந்தோஷ்குமார்;| **கள்ளியூர்** : கிருபாகரன்; |**காட்பாடி** : பால்பிச்சமுத்து; |**வால்பாறை** : மழலைமொழி; |**சிவன்வாயல்** : மினிவசந்தம்; |**காயல்பட்டணம்** : எஸ்தர்;| **காசிமேஜர்புரம்**: ரூத்; |**ஏர்காடு** : டேவிட்; |**தாம்பரம்** : விக்டர் மகேஷ்; |**நேர்குண்ரம்** : சாந்தி; |**இலஞ்சி** : நூர்ஜகான்.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் – 77

நீதிமொழிகள் (1-31) அதிகாரங்கள்
(பொருத்துக)இருப்பிடத்துடன் விடை எழுதவும்.

| | |
|---|---|
| 1. தீபம் | - நல்ல ஔஷதம் |
| 2. ஞானம் | - பரஸ்திரீயின் வாய் |
| 3. குணசாலியான ஸ்திரீ | - ஜீவ வழி |
| 4. ஜெயம் | - வாய்க்கு இன்பம் |
| 5. ஜீவ ஊற்று | - நித்திய விருந்து |
| 6. வேதம் | - களஞ்சியம் |
| 7. மனரம்மியம் | - நீடிய சாந்தமுள்ளவன் |
| 8. பரிதானம் | - நற்செய்தி |
| 9. முள்வேலி | - அழிவு |
| 10. சுத்தவெள்ளி | - மகிமையான கிரீடம் |
| 11. மனமகிழ்ச்சி | - வஞ்சனையுள்ளது |
| 12. கட்டளை | - குதிரை |
| 13. குளிர்ந்த தண்ணீர் | - மூடன் |
| 14. மேன்மை | - மனைவியின் சண்டைகள் |
| 15. அகந்தை | - விளக்கு |
| 16. ஆழமான படுகுழி | - மனுஷனுடைய ஆவி |
| 17. ஓயாத ஒழுக்கு | - சோம்பேறியின் வழி |
| 18. போதக சிட்சை | - வெளிச்சம் |
| 19. சௌந்தரியம் | - முத்து |
| 20.எருது | - இரத்தினம் |
| 21. கோபம் | - நீதிமானுடைய நாவு |
| 22. தேன் | - நீதிமானுடைய வாய் |
| 23. பிரம்பு | - கிரீடம் |
| 24. மகா புத்திமான் | - தாழ்மை |
| 25. நரைமயிர் | - நிஷ்டூரமுள்ளது |

| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.06.2019 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |
|---|---|



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**“பரிபூரண ஜீவன்”**
**Sis.சாந்தி பால், W/o. Rev. பால் பிரகாசம்**
A.G. Church, 23- மெயின்ரோடு,செங்கோட்டை - 627 809
செல்: 88077 18002

## AGVBS ஆசிரியர் பயிற்சி










## மிஷனரி பயணங்கள்




## Global University Graduation, Trichy









Registered News Paper Regd. No. 8206 / 62

## MABC பட்டமளிப்பு விழா 2019 – சென்னை











## ANTIOCH BIBLE SEMINARY & COLLEGE பட்டமளிப்பு விழா 2019 – பாண்டிச்சேரி











BOOK POST

If Undelivered please return to

**PARIPOORANA JEEVAN**

30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165